பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (02-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:06

## கூட்டணி ஆதரவாளர் பேரம்பலத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன

### பல நூற்றுக் கணக்கானோர் அஞ்சலி

யாழ்ப்பாணம்,டிசெ.2

தீவகத்தில் தேர்தல் பிரசாரப் பணிக்காக் சென்றிருந்த வேளை ஆயுததாரிகளால் மிலேச்சத்தனமாகத் தாக்கி படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர் ஏரம்பு பேரம்பலத்தின் பூதவுடல் பல நூற்றுக்கணக்கான பொது மக்களின் இறுதி அஞ்சலியின் பின்னர் நேற்று தீயுடன் சங்கமமாகியது.

ஓட்டுமடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன. பின்னர் அவரது பூதவுடல் யாழ்.பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு இராமநாதன் மண்டபத்துக்கு முன்பாக அமைக்

(20ஆம் பக்கம் பார்க்க)



தீவகத்தில் கடந்த புதனன்று மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட கூட்டமைப்பின் ஆதரவாளரான ஏரம்பு பேரம்பலத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. அவரது பூதவுடல் யாழ். பல்கலைக் கழகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் அவரது இறுதி ஊர்வலம் மயானம் நோக்கிப் புறப்படுவதையும் படங்களில் காணலாம். *(படம்: பொ. இராஜேஸ்வரன்)*

# கூட்டமைப்பு - மிக நல்ல திருப்பம்!

# ஈ.பி.டி.பி. - தமிழ் விரோத சக்தி!!

## அன்ரன் பாலசிங்கம் பிரகடனம்

- லண்டனில் இருந்து உதயன் விசேட செய்தியாளர் :- ரோஜன் -

லண்டன்,டிசெம்பர்2

**ஈழத் தமிழ் மக்களுடைய சுதந்திர உரிமைக்கான வரலாற்றுப் போராட்டத்தில் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பின் உருவாக்கம் நல்லதோர் - வரவேற்கத்தக்க - திருப்பம்; அதேசமயம் இன்று தமிழ் விரோத சக்திகளில் முன்னிலையில் இருப்பது ஈ.பி.டி.பிதான்!**

**- இவ்வாறு பிரகடனம் செய்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்.**

பிரித்தானிய தமிழர் ஒன்றியம் நேற்று ஏற்பாடு செய்திருந்த 'தேசிய நினைவு எழுச்சி நாள் - 2001' நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு அறிவித்தார்.

லண்டனில் உள்ளூர் நேரப்படி மாலை மணிக்கு (இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 1.30 மணி) அவரது உரை ஆரம்பமானது. அதிகாலை இரண்டு மணிக்கு இச்செய்தி அச்சுக்குப் போன சமயமும் அவரது உரை தொடர்ந்த வண்ணம் இருந்தது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பேரெழுச்சியுடன் நேற்று லண்டனில் எழுச்சி நாள்

லண்டன்,டிசெ.2

பிரித்தானியத் தமிழர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள "தேசிய நினைவு எழுச்சி நாள் - 2001" நேற்று சனிக்கிழமை லண்டன் நேரப்படி மாலை 4.40 மணிக்கு லண்டன் அரேனா மண்டபத்தில் ஆரம்பமானது.

சுமார் பன்னிரண்டாயிரம் பேரைக கொள்ளக்கூடிய இந்தப் பெரும் மண்டபத்தில் நேற்று நிகழ்வு ஆரம்பமானபோது சுமார் பத்தாயிரம் பேர் கூடியிருந்தனர். தொடர்ந்து மக்கள் வந்தவண்ணம் இருந்தனர்.

கூட்டமாக வந்த மக்கள் நுழைவாயிலினூடாக மண்டபத்துக்குள் நுழைவதில் ஏற்பட்ட நெருக்கடி, சிரமங்கள் மற்றும் தாமதங்கள் காரணமாக நிகழ்வும் சுமார் 40 நிமிடம் பிந்தியே ஆரம்பமானது.

(20ஆம் பக்கம் பார்க்க)

### அதியுயர் பாதுகாப்புப் பகுதியில் அமைந்திருக்கும்

## மட்டு. ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்றுக் காலை குண்டுவெடிப்பு!

### வேட்பாளர் உட்பட 26 பேருக்குக் காயம்

மட்டக்களப்பு,டிசெ.2

மட்டக்களப்பு நகரில் அதியுயர் பாதுகாப்புப் பிரிவினுள் அமைந்துள்ள ஈ.பி.டி.பியினரின் அலுவலகத்தில் நேற்று குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஈ.பி.டி.பியின் வேட்பாளர் ஒருவர் உட்பட 26பேர் படுகாயமடைந்தனர்.

ஏகாம்பரமூர்த்தி பரணீதரன் பிரதீபன் என்பவரே படுகாயமடைந்தார்.

நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. படுகாயமடைந்தவர்களில் 16பேர் பெண்கள், மூவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர். இவர்களில் 22 பேர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி

(20ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் ஆதரவாளர் இருவர் நேற்று சுட்டுக் கொலை!

### களுவாஞ்சிக்குடியில் சம்பவம்

மட்டக்களப்பு,டிசெ.2

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி, எருவில் பகுதியில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த புளொட் அமைப்பின் ஆதரவாளர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

புளொட் அமைப்பின் மட்டக்களப்பு வேட்பாளர் பாக்கியராஜாவின் சகலனான நந்தகுமார் (வயது 28) மற்றும் அந்த அமைப்பின் ஆதரவாளரான சந்திரப்பிள்ளை ஜெகதீஸ்வரன (வயது 25) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த சமயம் திடீரென அங்கே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்களை நோக்கிக் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவர்களுடன் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த மற்றுமொருவரான பழனி தம்பி சந்திரன் என்பவர் அங்கிருந்து ஓடியதனால் உயிர் தப்பினார். (ம)

### தீவகத் தாக்குதலைக் கண்டித்து

## மட்டக்களப்பில் நேற்று நடந்த பேரணி மீதும் துப்பாக்கிச் சூடு!

### நான்கு பேர் காயமுற்றனர்

மட்டக்களப்பு,டிசெ.2

அம்பாறை திருக்கோயிலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சீனித்தம்பி சுந்தரலிங்கம் (வயது 45), ம.றமேஸ் (வயது 18), ம.திராவிடமணி (வயது 40), இ.ஜெயக்குமார் (வயது 35) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

யாழ்.தீவகத்தில் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைபறிச்சான் முகாம் மீதான தாக்குதலில் 2 சிப்பாய்கள் பலி!

திருகோணமலை,டிசெ.2

மூதூர் கட்டைபறிச்சான் இராணுவ முகாம் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.


இந்தத் தாக்குதலை அடுத்து படையினர் மேற்கொண்ட கடும் ஷெல் தாக்குதலில் பாடசாலை மாணவன் ஒருவன் கொல்லப்பட்டான். மேலும் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

ஷெல் தாக்குதலில் பேரின்பநாதன் சிவநாதன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எம்.ஜுனைத் (வயது 45), அவரது மகளான

(20ஆம் பக்கம் பார்க்க)




தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முதன்மை வேட்பாளர்
வீ.ஆனந்தசங்கரி
அவர்களை
ஆதரிப்போம்!



(C/19585)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக தாதியர் தோழர்

## அமரர் ஐயாமுத்து விசாகப்பெருமாள்

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த வேதனையினை ஒத்த உணர்வுடன் வெளிப்படுத்துகின்றோம்.

*தாதியர்,*
*தெல்லிப்பழை வைத்தியசாலை,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

(C/19604)

## அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சி,டிசெ.2

எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாசாலையில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை வடமராட்சியில் தசோதிலிங்கம் என்பவரிடமும், வலிகாமத்தில் சோ.ஸ்ரீகாந்தன் என்பவரிடமும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

# பரிசளிப்பு விழா

29.11.2001 அன்று நடைபெற இருந்து, தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட பாடசாலை பரிசளிப்பு விழா இன்று 02.12.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

- அதிபர்.

(C/19606)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 4 ஆம் வருட (மெய்யியல் சிறப்புக்கலை) மாணவன்

**ப.மணிவண்ணன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கந்தையா பரநிருகரம்

அவர்கள் நேற்று முன்தினம் (30-11-2) இறைபதமடைந்தமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி.* (C/19600) *4 ஆம் வருட நண்பர்கள்.*



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

☆நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடிய யுத்தத்தை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கவும்,

☆மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச நிர்ப்பந்திக்கவும்,

☆மனித உரிமை மீறல்களை உலக அரங்கிற்கு அம்பலப்படுத்தவும்,

☆எம் மக்களின் பாதுகாப்பிற்கும் உரிமைக்கும் என்றும் உழைக்கவும்,

☆நிம்மதி இழந்து வாழும் எமது இளம் தலைமுறையின் எதிர்காலத்திற்காக என்றும் பாடுபடவும்,

**ச.அரவிந்தன் இல. 2**

இது போன்ற பணிகளை - சேவையை எம்மக்களுக்கு நான் ஆற்ற இளைஞர் என்ற வகையில் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் தருமாறு உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி** ✕

| 1 | ~~2~~ | ~~3~~ | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

உங்கள் விருப்பு வாக்கு மூன்றில் ஒன்றை எமது கட்சியின் முதன்மை வேட்பாளரான **திரு.வீ.ஆனந்தசங்கரியின்** இலக்கமாகிய 3 இற்கு மேலே புள்ளடியிட்டும் மற்றய விருப்பு வாக்கில் ஒன்றை எனது இலக்கமாகிய 2-இற்கு மேலேயும் புள்ளடியிட்டு எம்மை அறுதிப்பெரும்பான்மையான வாக்குகளுடன் நாடாளுமன்றம் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

*முக்கிய குறிப்பு:* எமது கட்சி உறுப்பினருக்கு கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் தீவகத்தில் நடந்த அசம்பாவிதம் காரணமாக பூரணமான தேர்தல் பிரசாரங்களில் என்னால் ஈடுபட முடியாமல் இருப்பதனால் என்னால் தங்களை தனிப்பட்ட முறையில் தங்களின் இல்லங்களில் வந்து சந்திக்காமைக்காக மனம் வருந்துகின்றேன். தாங்களும் என்னை மன்னிப்பீர்கள் என நம்புகின்றேன்.

மக்கள் பணியில்,
ச.அரவிந்தன்

(95504)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிவஞானம்

(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், ஆங்கிலம் வடமராட்சி கல்வி வலயம்)

முடக்காடு வீதி, கரவெட்டியைப் பிறப்பாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவஞானம் நேற்று (01.12.2001) சனிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணி - பொன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் குணமணியின் அன்புக் கணவரும் குணரத்தினம், குலநாயகம், விமலாதேவி, கணேசா, திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வானை விநாயகம், சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வடமராட்சி கல்வி சமூகத்தினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*முடக்காடு வீதி,*
*அரசடி,*
*கரவெட்டி.*

(C/19603)

தகவல்:
சி.குணமணி
(மனைவி)


நாகம்ஸ் ...னாகம்



பிரசாந்த், ஷ..., மணிவண்ணன் ...த்த

பிரியாத ...ம் வேண்டும்

(...ல்ஸ்)

தினசரி 3.00 (பி.நே.)

(95477)




# அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!

தமிழினத்தின் விடுதலைக்காக, ஜனநாயகத்தை மீட்பதற்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

## திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்

அவர்கள்

28.11.2001 புதன்கிழமை ஊர்காவற்றுறையில் வன்முறையாளர்களால் தாக்கப்பட்டு, ஏற்பட்ட கடும் காயங்களுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால் இத்தேர்தலில் அவர் நேரடியாக வந்து எம் மக்களிடம் வாக்குக் கேட்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். எனவே நாம் எல்லோரும் திரண்டு வந்து உதயசூரியனுக்கு வாக்களித்து அவரது இலக்கமான 6 இன் மேல் புள்ளடியிட்டு அவரை அமோக வெற்றிபெறச் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி** ✕ 6

*-- வடமராட்சி மக்கள்.*

(95502)


லக்ஷ்மி இணுவில்

விஜய், கனகா, செந்தில் நடித்த

கேல் காளை

(ரீல்ஸ்)

காலை 10.30, 2.30, (ப.நே)

நி...ஜீசினிமா ...ங்கானை

...மார், சுகன்யா, ...ர்டர் நடித்த

இவரசன்

(ரீல்ஸ்)

தினசரி 2.30, 5.30 (பி.நே.)

(C/19574)

ராஜா யாழ்ப்பாணம்

இவ்வு வாரமாக

..., மனிஷா ...பலர் நடித்த

ஆளவந்தான்

தினசரி 10, 2, 5 (புதிய நேரம்)

சனி, ஞா 10, 2, 5 (புதிய நேரம்)

(C/19573)




உண்மை, நேர்மை, சத்தியம் வழிவந்த

## தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாள

## திரு.வி.ஜீ.தங்கவேல் அவர்களே

**05-12-2001** ✕ 10 என் வு 10

(93920)

# வடக்குக் கூட்டணியில் பிளவு: ஜேர்மன் மாநாடு ஸ்தம்பித்தது!

## கேள்விக்குறியாகும் ஆப்கானின் எதிர்காலம்

பொன்,டிசெ.2

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து ஜேர்மனியின் 'பொன்' நகரில் இடம்பெற்று வரும் மாநாடு ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆப்கானின் பெரும்பகுதியை தலிபான்களிடமிருந்து கைப்பற்றிய வடக்குக் கூட்டணிக்குள் ஏற்பட்ட பிளவினாலேயே, மாநாடு தொடர்வதற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

தலிபான்களை எதிர்ப்பவை என்ற ஒரே ஒரு ஒற்றுமையைத் தவிர, ஆப்கான் குழுக்களிடையே வேறு ஒற்றுமைகளை ஏற்படுத்த முடியவில்லை என்று மாநாட்டை ஏற்பாடு செய்த ஐ.நாவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.


பொன் மாநாடு நடைபெறும் மண்டபத்தில் வெளியே ஆப்கான் தொடர்பான ஆர்ப்பாட்டம் ஒன்று.

ஆப்கானில் தலிபான்களுக்கு பின்னரான, இடைக்கால அரசை அமைப்பதற்கு, மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால் இடைக்கால அரசில் இடம்பெறவேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கத் தொடங்கியதும், ஆப்கான் குழுக்களிடையே - குறிப்பாக வடக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அமைப்புகளிடையே - பிணக்குகள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இடைக்கால அரசில் இடம்பெற சிலரது பெயர்களை வடக்குக் கூட்டணி தெரிவித்த பின்னரேயே, அதற்குள் முறுகல்கள் ஆரம்பமாகின.

மாநாட்டில் பங்கேற்கும் வடக்குக் கூட்டணிப் பிரதிநிதிகளுக்குத் தலைமை வகிக்கும் முன்னாள் அதிபர் பர்கானுதீன் ரபானி, இடைக்கால அரசில் அங்கம் வகிப்போர் பெயர் பட்டியலுக்குத் தாம் அங்கீகாரம் அளிப்பதைத் தவிர்த்து வருகிறார்.

இடைக்கால அரசின் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுக்களை 10 நாள்கள் ஒத்திப்போடுமாறு வடக்குக் கூட்டணி தற்போது கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் மாநாட்டை ஏற்பாடு செய்த ஐ.நாவும், போட்டி ஆப்கான் குழுக்களும் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டன.

உடன்பாடு எதுவும் எட்டாமல் 'பொன்' நகரிலிருந்து தாம் ஆப்கானிஸ்தானுக்கு திரும்பிச் செல்ல விரும்ப வில்லை என்று பேச்சில் பங்கேற்றுள்ள முன்னாள் மன்னர் ஷாகிர் ஷாவின் குழுவினர் தெரிவித்தனர்.

காபூலில் ஏற்படவுள்ள அதிகாரப் பகிர்வில் தாம் புறக்கணிக்கப்படுவதாக 'ஹர்சாத்' இனத்தின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினர்.

முன்னாள் அதிபர், முன்னாள் மன்னர் ஆகியோர் தாமே நிர்வாக உயர் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்று இரகசியப் போட்டியில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவர்களைத் தவிர தற்போது இனக்குழுக்களின் தலைவர்களும் பதவிப் போட்டியில் இறங்கியிருப்பது, நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(ஒ-4)


ஆப்கானின் ஹேரத் நகர் அருகே உள்ள மஸ்லாக் அகதி முகாமில் 2 லட்சம் அகதிகள் தங்கியுள்ளனர். தற்போது மேலதிகமாக வந்துள்ள 7 ஆயிரம் அகதிகள் அங்கு தங்க இடமின்றி அவதியுறுகின்றனர். அவர்களில் சிலரை படத்தில் காணலாம்

# பின்லேடனின் நெருங்கிய சகாவை வடக்குக் கூட்டணி பிடித்தது!

காபூல், டிசெ.2

ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய சகாவும் அல்கெய்டா அமைப்பின் மூத்த தளபதிகளில் ஒருவருமான அஹமட் அப்துல் ரஹ்மான் என்பவரைத் தாம் பிடித்துள்ளதாக வடக்குக் கூட்டணி நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளின் பேச்சாளர் கென்டன் கெய்த் இதனை உறுதிப்படுத்தினார்.

எகிப்தியரான ரஹ்மான் வடக்குக் கூட்டணிப்படையினரிடம் பெயர் குறிப்பிடப்படாத இடமொன்றில் சிக்கிக்கொண்டதாகவும் -

அவரை கூட்டுப்படையினர் வசம் வடக்குக் கூட்டணி ஒப்படைத்துவிட்டதாகவும் -

கென்டன் கெய்த் மேலும் தெரிவித்தார்.

35 வயதான அஹமட் அப்துல் ரஹ்மானின் தந்தையான ஒமர் அப்துல் ரஹ்மான், 1993 ஆம் ஆண்டு அமெரிக்க வர்த்தக நிலையக் கட்டடத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்புத் தொடர்பாக அமெரிக்கச் சிறையில் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகிறார்.

அல்கெய்டா அமைப்பினருக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதில் அஹமட் அப்துல் ரஹ்மான் முக்கிய பங்கு வகித்தவர் என்றும் -

அல்கெய்டாவின் தூண்களில் ஒருவர் பிடிபட்டிருப்பது இதுவே முதல் தடவை என்றும் -

அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)

### தற்கொலைத் தாக்குதலையடுத்து

# பலஸ்தீன நகரங்கள் இரண்டை இஸ்ரேலியப் படை சுற்றிவளைப்பு!

காஸா,டிசெ.2

பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலையடுத்து, மேற்குக் கரையில் பலஸ்தீன நகரங்கள் இரண்டை இஸ்ரேலியப்படைகள் சுற்றிவளைத்தன.

வடக்கு இஸ்ரேலிய நகரான ஹடேராவில் கடந்த வியாழக்கிழமை, பஸ் ஒன்றில் பலஸ்தீனர் ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கவைத்ததில், அவரும், பஸ் பயணிகள் மூவரும் உயிரிழந்தனர். இத்தாக்குதலுக்குப் பொறுப்பேற்ற பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான இஸ்லாமிய ஜிகாத் அமைப்பு, ஜெனின் நகரைச் சேர்ந்த 34 வயதான சமீர் அலுசுலைமான் என்பவரே தற்கொலைத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்தது.

இத்தாக்குதல் இடம்பெற்ற 24 மணித்தியாலங்கள் கழிந்து, டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இஸ்ரேலியப் படைகள் ஜெனின் மற்றும் நப்லஸ் நகரங்களை சுற்றி வளைத்துள்ளன.

இந்த இரு நகரங்களும் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் பிரதான நிலைகளாக இருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பினயமின் பென் எலிஸர் கூறியுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் மேற்காசிய அமைதி முயற்சி தொடர்பாக அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் பேச்சு நடத்த அமெரிக்கா சென்றுள்ள இந்தச் சமயத்தில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றிருப்பது கவலையளிப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கச் சமாதானத் தூதர் அன்ரனி ஜின்னி, பலஸ்தீன, இஸ்ரேலிய யுத்தநிறுத்தத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மேற்காசியா வந்துள்ளவேளையில் நடைபெறும் இத்தகைய சம்பங்கள், அவரது முயற்சியைச் சீர்குலைக்கும் என்று கருதப்படுகிறது.

தனது முயற்சியை சீர்குலைப்பதற்காகவே, தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதாகவும் -

ஆனால் அமைதியை ஏற்படுத்தும் தனது முயற்சிகளை அவை தடுக்கப்போவதில்லை என்றும் -

அமெரிக்க தூதர் தெரிவித்தார்.

மேற்காசியாவில் அமைதியை ஏறபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அன்ரனி ஜின்னி மற்றும் வில்லியம் பேர்ன்ஸ் ஆகியோரை அமெரிக்கா அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)


இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சின்னாபின்னமாகிச் சிதைந்துபோய்க்கிடக்கும் பஸ். உயிரிழந்த ஒருவரின் சடலம் பஸ் யன்னல் வழியாக வெளியே தொங்கிக்கொண்டிருக்கிறது.

# வீரப்பனுடன் கோபாலுக்கு தொடர்பு என்கிறது பொலீஸ்!

சென்னை,டிசெ.2

கடந்த ஆண்டு கன்னட நடிகர் ராஜ்குமார், சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்திய சம்பவத்துடன் தொடர்புபடுத்தித் தன்னைக் கைது செய்தால், பிணையில் விட வேண்டும் என்று கோரி 'நக்கீரன்' பத்திரிகை ஆசிரியர் கோபால் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் 'நக்கீரன்' கோபாலுக்கு சம்பந்தமிருப்பதாக, கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் பொலீஸ் அதிகாரி, ஐ.சேகரன் தெரிவித்திருந்தார். இதனால் கோபால் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்றும் -

இதற்காக கர்நாடகப் பொலீஸார் சென்னை வந்திருப்பதாகவும் -

சென்னையில் செய்திகள் பரவின.

இந்த நிலையில், பொலீஸார் தன்னைக் கைது செய்தால் முன்பிணை அனுமதி வழங்க வேண்டுமென்று, கோரி 'நக்கீரன்' கோபால் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

நடிகர் ராஜ்குமாரை மீட்க தமிழக, கர்நாடக அரசுகளின் தூதராக கோபால் காட்டுக்குள் சென்று வீரப்பனைச் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# கள்ளச் சாராயம் அருந்திய 50 தொழிலாளர்கள் மரணம்!

### தமிழகத்தில் சம்பவம்

தமிழகத்தில் கள்ளச்சாராயம் அருந்திய இருநூறுக்கும் அதிகமானவர்களில் 50பேர் உயிரிழந் தனர். 30 பேர் கண்பார்வை இழந்தனர். மருந்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டவர்களில் மேலும் பலரது உடல நிலை கவலைக்கிடமாக உள்ளது.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள கிராமங்களைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் கடந்த வியாழக்கிழமை பண்ருட்டியின் புறநகர்ப் பகுதியில் ஓரிடத்தில் விற்கப்பட்ட கள்ளச்சாராயத்தை வாங்கி அருந்தினார்கள்.

அன்றிரவு அவர்களில் ஒருவர் கள்ளச் சாராயத்துக்குப் பலியானார் பலருக்கு கண்பார்வைக் குறைவு உட்பட பல பக்க விளைவுகள் ஏற்பட்டன.

இதனையடுத்து, கள்ளச் சாராயம் அருந்திய சுமார் இருநூறு பேர் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அபாய நிலையில் இருந்தவர்கள் வேறு மருத்துவ மனைகளில் தீவிர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் கடலூர் மருத்துவ மனையில் 48 பேரும், விழுப்புரத்தில் ஒருவரும், பாண்டிச்சேரியில் ஒருவரும் சிகிச்சை பலனளிக்காது இறந்துவிட்டனர்.

மற்றவர்களில் சுமார் முப்பது பேருக்குக் கண் பார்வை முற்றாக அற்றுப்போயுள்ளது. பலருக்கு பார்வைக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துக்குக் காரணமான கள்ளச் சாராய விற்பனையாளர்களில் இருவர், அதே கள்ளச் சாராயத்தை அருந்தியதால் இறந்துவிட்டதாகவும் -

பாண்டிச்சேரியைச் சேர்ந்த மற்றொருவரான முருகன் என்பவரைப் பொலீஸார் தேடிவருவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கள்ளச்சாராய மரணங்கள் தொடர்பாக 3 பொலீஸார் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். மதுவிலக்குப் பிரிவைச் சேர்ந்த 40 அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

கடந்த 3 மாதங்களில் தமிழகத்தில் இடம்பெறும் நான்காவது கள்ளச்சாராய மரணச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-4-ரி)


தமிழினத்தின் விடுதலைக்காக!
தமிழ் மக்களின் விடிவுக்காக!
} போடுங்கள் புள்ளடி

இல.

பொதுத் தேர்தல் - 05-12-2001

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்
திரு.சி.சிவமகாராசா அவர்களையே ஆதரியுங்கள்!



தியாகம் - உண்மை - நேர்மை - தொண்டு
இவையே இவரது இலட்சியம்!

உங்கள் வாக்கு உதயசூரியனுக்கே!

(94859)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி பூ. சின்னத்தம்பி
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் கந்தர் சின்னத்தம்பி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

— ஆசிரியர் கழகம்,
யா/நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாசாலை.

(95484)

## மரண அறிவித்தல்கள்

குரும்பசிட்டி

### வடிவேலு செல்வநாயகம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு செல்வநாயகம் (இளைப்பாறிய சாரதி, இ. போ. ச.) அவர்கள் நேற்று (01-12-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், வசந்தகுமார், நந்தகுமார், சாந்தகுமாரி (கனடா), சாந்தகுமார் (ஜேர்மனி), விஜயகுமார் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி குமாரசுவாமி செல்லம்மா, ரி. வி. கிருஷ்ணசாமி, வ. சிவப்பிரகாசம் ஆகியோரின் அருமைச்சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2001) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சுகந்தன் ஸ்ரோர்ஸ்,
மன்னார் றோட்,
வவுனியா.

தகவல்:-
செ. விஜயகுமார்
(மகன்)

(95482)

### சபாபதி வரதராஜா (ஒப்பிலாமணி மாமா)

(முன்னாள் கிருஷ்ணா நகை மாளிகை உரிமையாளர்)

காரைநகர் எண்ணாங்கூப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 159, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி வரதராஜா 30-11-2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சபாபதி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் கந்தையா - சிவகாமன் தம்பதியினரின் மருமகனும் புவனாம்பிகையின் அன்புக் கணவரும் வேலாயுதபிள்ளை (கனடா), இரத்தினசபாபதி (மல்லாவி), செல்வராணி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோதி (கனடா), யோகேஸ்வரி (மல்லாவி), திருநீலகண்டன் (வவுனியா), செல்லம்மா (அமரர்), சிவபாக்கியம் (அமரர்), தியாகராஜா (C. T. B, அமரர்), பரஞ்சோதி (ஆஸ்திரேலியா), இந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் வினாசித்தம்பி (அமரர்), பரியாரி இராசசேகரம் (அமரர்). இராசையா (லண்டன்), இந்திராணி (வவுனியா), புஸ்பமலர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (2-12-2001) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்'

தகவல்:
புவனாம்பிகை (M.P. அக்கா)
(மனைவி)
பாலரூபன் (பேறாமகன்)
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

159, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்,

(சி/19602)

### பொன்னையா கந்தசாமி

(நகைக்கடை உரிமையாளர், சுன்னாகம்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா - கந்தசாமி 28-11-2001 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லம்மாவின் மூத்த மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வராசா (பிரான்ஸ்), ஜெயராசா (பிரான்ஸ்), ஜெயராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதாம்பாள் (பிரான்ஸ்), பமிலா (பிரான்ஸ்), கிருஷ்ணசாமி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும், வதனாதேவி, ரமேஷ்நாத், அஷ்வினி, சிவாஜினி, நிசாவினி, பிரியங்கா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராமசாமி, எங்கரசு மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 2-12 2001 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந் அதறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக்

தகவல்:
மகேஸ்வரி
(மனைவி)

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

(95490)

# கிளிநொச்சிப் பாடசாலைகளை புனரமைக்க ரூ. 5 கோடி தேவை

வவுனியா, டிசெ. 2

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் சேதமடைந்த 17 பாடசாலைகளையும் மீளமைக்க ஐந்து கோடி ரூபாவுக்கு மேல் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதல் படையினர் கிளிநொச்சியில் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளால் 17 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

அந்தப் பாடசாலைகளின் சேதம் குறித்து கல்வித் திணைக்களம் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கட்டடங்களுக்கு 4 கோடி ஐந்து லட்சத்து 12 ஆயிரம் ரூபாவும், தளபாடங்களுக்கு 76 லட்சத்து 92 ஆயிரம் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, இந்துக்கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, வட்டக்கச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகபுரம் மகாவித்தியாலயம், திருவையாறு மகாவித்தியாலயம், புனித அந்தோனியார் றோ. க. த. க. பாடசாலை, புனித பத்திமா றோ. க. த. க. பாடசாலை, கனகாம்பிகைகுளம் அ. த. க. பாடசாலை, சிவநகர் அ. த. க. பாடசாலை, புது முறிப்பு விக்னேஷ்வரா வித்தியாலயம், உற்றுப்புறம் அ. த. க பாடசாலை, செல்வநகர், அ. த. க பாடசாலை, சிவபாத கலையகம் அ. த. க பாடசாலை, இந்து ஆரம்ப பாடசாலை, பாரதி வித்தியாலயம், பண்ணங் கண்டி அ. த. க பாடசாலை ஆகியனவே சேதமடைந்தன. (ஐ)

## மாணவருக்கு தேர்ச்சி அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 2

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தரம் 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்களில் கல்வி கற்ற மாணவர்கள் தமக்குரிய தேர்ச்சி அறிக்கைகளை நாளை திங்கட்கிழமை பெற்றுக்கொள்ளலாம் என அதிபர் அறிவித்துள்ளார்.

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை அன்றைய தினம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-7)

## வவுனியாவில் வேட்பாளர் மீது தாக்குதல்

வவுனியா, டிசெ. 2

வவுனியா மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளி இரவு 11.30 மணி அளவில் இடம்பெற்றது.

கே. எம். ஆப்தீன் தலைமையிலான சுயேச்சைக்குழுவின்வேட்பாளரான விக்கிரமபால என்பவரே தாக்கப்பட்டவர் ஆவார்.

நகரில் சுவரொட்டிகளை அவர் ஒட்டிக்கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு வந்த பொலிஸார் சுவரொட்டிகளை ஒட்டவேண்டாம் என்று கூறினர் என்றும் அதற்குப் பின்பு பொலிஸாருக்கும் அவருக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது என்றும் பொலிஸார் துப்பாக்கி அடிப்பாகத்தால் அவரைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நிலையில் அவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### ஐயாமுத்து விசாகப்பெருமாள்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை)

சுன்னாகம் பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொத்தாவத்தை மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாமுத்து விசாகப்பெருமாள் 29-11-2001 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கமலசோதி அவர்களின் அன்புக் கணவரும் விஜிதா (U K), கவிதா (நுண்கலைப் பீட மாணவி, இசைத்துறை 2ஆம் வருடம்), சசிகரன், சுஜித்தா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர 2001 கலைப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வசந்தகுமார் (U.K), அவர்களின் மாமனாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசபிள்ளை (கொழும்பு), கனகாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சுந்தராசா மற்றும் சிவராசா, வரதராசா (கனடா), ஆகியோரின் அருமை மைத்துனரும் டிலக்ஷன் (U K), நிருஜ (U K), கிரணி (U.K) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (02-12-2001) முற்பகல் 11.00 மணிக்கு பருத்திக் கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. கமலசோதி,
(மனைவி)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

(சி/19596)

### சுப்பையா குமாரசமி

(இளைப்பாறிய மருந்துக் கலவையாளர்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் கைதடி மேற்கில் வசித்தவருமான சுப்பையா குமாரசாமி நேற்று (1-12-2001) சனிக்கிழமை மதியம் 1.00 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் திருமதி பவளமணி தியாகராசா, இராஜரட்ணம், சுப்பிரமணியம் (ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், நல்லூர்), சண்முகசுந்தரம் (அமெரிக்கா), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தியாகராசா (வவுனிக்குளம்), கமலாஜனிதேவி (கைதடி மேற்கு). சந்திரகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பிரேமதாஸ் மற்றும் வளர்மதி (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, மட்டக்களப்பு), செல், கவிதா, பிரியதாஸ், கலா, பவானி, லபேந்திரன் (மாணவன், யாழ். பரியோவான் கல்லூரி), சுபா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2—12—2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது தற்காலிக வசிப்பிடமாகிய நல்லூரில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்—
சுப்பிரமணியம் (மகன்)
(கைதடிமேற்கு)

தற்காலிக முகவரி;-
312, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(மாநகரசபை முன்பாக)

(95481)

### Dr. பாலேந்திரா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. பாலேந்திரா 30—11—2001 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம்—நாகமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி—கனகம்மாவின் மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (கனடா), நந்தகுமார் (பிரான்ஸ்), பத்மினி, சித்திரா (லண்டன்), சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற யோகநாதன் (பேர்), அருள்மொழிதாஸ் (சவூதி), சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும் பிரதீ (யாழ். பல்கலைக்கழகம்), இராஜஇராஜன் (கனடா), விஷ்ணுசன் (லண்டன்), வருணி (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் —11—2001 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொட்டிலடி,
சங்கானை.

(95489)

உதயன்

## வாக்குச்சீட்டு மோசடி!

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கென அச்சிடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குச்சீட்டுகள் - கட்சி ஒன்றின் சின்னத்துக்குப் புள்ளடியிடப்பட்ட நிலையில் - ஹட்டன் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசுத்தரப்பு அரசியல்வாதி ஒருவரின் வாகனத்தில் எடுத்துச் செல்லப்படுகையிலே வழியில் பொலீஸ் சோதனைச்சாவடி ஒன்றில் இவை சிக்கியிருக்கின்றன.

தேர்தலன்று இந்த வாக்குச்சீட்டுகளைத் தங்கள் ஆள்கள் வாக்களிக்கச் செல்லும்போது கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தனுப்பி வாக்குப் பெட்டிகளை நிரப்புவது இந்த வாக்குச்சீட்டுக்களை எடுத்துச் சென்றவர்களின் திட்டமாக இருக்கலாம் என்று பரவலாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் அரச அச்சகத் திணைக்களம், அரசாங்கத்தின் கீழ் இயங்குவது. இந்த வாக்குச்சீட்டுகளும் அரச தரப்பினரின் வாகனத்தில் இருந்தே சிக்கியிருக்கின்றன. எனவே சந்தேகம் வலுக்கின்றது.

ஆனால் -

அரச செய்தி ஊடகங்கள் வேறு மாதிரித் தகவல் வெளியிடுகின்றன.

தற்போதைய தேர்தலில் வாக்களிப்பு, புள்ளடியிடுதல் என்பன மிகச் சிக்கலான நடைமுறையில் அமைந்தவை. சாதாரண, படித்த மக்களில் பலருக்கே இந்த வாக்களிப்பு முறையும், அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதமும் விளங்குவதில்லை. கட்சிக்கு வாக்களித்தல், வேட்பாளருக்கு - அவரின் தெரிவு இலக்கத்தைக் கண்டுபிடித்து - புள்ளடியிடல் என்று ஒரே குழப்பம்.

தனது வாக்கைக் கட்சிக்குப் போடாமல், வேட்பாளருக்குப் போடலாமா? வேட்பாளருக்குப் போடாமல் கட்சிக்குப் போடலாமா? ஒரு கட்சிக்கும் மற்றொரு கட்சியின் வேட்பாளருக்கும் வாக்குப்போட முடியுமா? -என்றெல்லாம் படித்தவர்களே முழிக்கின்றார்கள். இந்நிலையில் படிப்பறிவில் ஓரளவு தேர்ச்சிபெறாத நிலையில் இருக்கும் மலையக மக்களுக்கு இவ்விவகாரம் அடியோடு புரியவேயில்லை. எனவே அவர்களுக்கு வாக்களிப்புக் குறித்துச் செயல் விளக்கங்கள், பயிற்சிகள் தர வேண்டியிருக்கின்றது. அதன் மூலமே அவர்கள் தமது வாக்குரிமையைச் சரிவரப் பயன்படுத்துவதற்கு வழி செய்ய முடியும். எனவே இந்த நோக்கத்தில் - மலையக மக்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக - எடுத்துச்செல்லப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டுக்களே அவை என்று அரசுத்தரப்பில் சமாதானமும் விளக்கமும் கூறப்படுகின்றது.

எனினும் வாக்குச்சீட்டை ஒத்த படிவங்களை அச்சிடுதல் சட்டவிரோதமான செயலாகும்.

1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 66ஆவது பிரிவின் (ஆ), (ஐ) உபபிரிவுகளின் கீழ் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஏதேனும் வாக்குச்சீட்டைப போலியாகப் புனைகின்ற அல்லது -

வாக்குச்சீட்டாகக் கொள்ளக்கூடிய ஒன்றை அச்சிடுகின்ற -

நடவடிக்கை தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டம் தெரிவிக்கின்றது.

இவ்வாறு வாக்குச்சீட்டுக்கள் போலியாக அச்சிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் சேர்க்கப்படும் மோசடியை முறியடிப்பதற்காக -

வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டைக் கையளிப்பதற்கு சற்று முன்னர் அதில் விசேட 'ஸ்டிக்கர்' ஒன்றை ஒட்டும் நடைமுறையை, கடந்த பொதுத் தேர்தலின்போது திடீரென அறிமுகம் செய்வதற்குத் தேர்தல் ஆணையாளர் இரகசியமாக நடவடிக்கை எடுத்ததும் -

அந்த 'ஸ்டிக்கரை' எடுத்துச் சென்ற வாகனத்தையும் அது அச்சிடப்பட்ட இடத்தையும் பொலீஸ் மூலம் சுற்றிவளைக்கவைத்து, அந்தத் திட்டத்தை அரசுத்தரப்பு அம்பலப்படுத்தி முறியடித்ததும் -

நமக்குத் தெரிந்தவைதான்.

அத்தகைய அரசுத்தரப்பிடம் இருந்துதான் வாக்குச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வெளியிலிருந்து வாக்குச் சீட்டுக்களைக் கொண்டுவந்து வாக்குப் பெட்டிக்குள் திணிக்கும் இந்த நடவடிக்கையை முறியடிப்பதற்கு இம்முறையும் இரகசியத் திட்டங்களை வைத்திருப்பதாகவும், இறுதி நேரத்தில் அவை செயற்படுத்தப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் கூறுகின்றார். அவரது முயற்சி வெற்றியளிக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

### நீக்கப்படுவதாக அறிவித்து ஒருமாதம் பூர்த்தி

# பயணத்துக்கு அனுமதி பெறும் நடைமுறையில் மாற்றமில்லை!

யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்துக்கு பாதுகாப்பு அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறை உடனடியாக நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு சுமார் ஒரு மாதம் கடந்து விட்ட நிலையிலும் நடைமுறையில் எத்தகைய மற்றங்களும் இன்னமும் செய்யப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பயணப்பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையை நீக்குவதான உத்தரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கடந்த மாதம் 5 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்ததும் ஓரிரு நாள்களில் இந்தக் கட்டுப்பாடு நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பயணத்துக்கு பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை தற்போதும் வழமை போன்றே அமுல் செய்யப்பட்டு வருகிறது.

(ஐ-6-10-173-180)

# வன்செயல்களைத் தடுப்பதற்கு அனைத்துக் கட்சி மாநாடு

### கூட்டக் கோருகிறார் ரணில்

அதிகரித்துவரும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடாபாக ஆராய்வதற்காக அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டுமாறு கோரி ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் அபாயகரமான நிலைமைகள் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் -

இதன்மூலம் ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்த முடியாமல் போய்விடும் எனவும் -

அவர் தமது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். (ஐ-4)

## நாட்டு நடப்பு

### ஆச்சிக்கு வந்த ஆசை

"குஞ்சாச்சி! போன கிழமை எணை
கொழும்புக்கு நான் போகயிக்கை
பஞ்சாய்ப் பழுத்த கிழடொன்று
பக்கத்தில் இருந்து வந்ததெணை
'அஞ்சாத ஆச்சி நீ தனியே
ஆரீட்டையெணை போறாய்?' என வினவ
செஞ்சிலுவைக் கப்பல் ஏறியெல்லோ
செல்கிறாளாம் ஆச்சி லண்டனுக்கு
'ரஞ்சன் என்ரை இளைய பேரனடா
ரஷ்யாவில் படிச்சுப் போட்டு
மஞ்செஸ்டரில் டாக்டராயின்று
மவுசாய்த் தொழில் பார்க்கிறானாம்
இஞ்சினீயர் பாஸ்பண்ணிய பெட்டையை
இவன் விரும்பிக் கட்டிறானாம்
இஞ்சை கிடந்து ஷெல் அடிக்க
இனியும் தாங்க முடியாதெல்லோ
கொஞ்சி வளர்த்த பேரனுக்கு
கொண்டு போறன் எள்ளுருண்டை' என்றாள்"
குஞ்சாச்சி இதனைக் கேட்டபின்பு
கொண்டுவா பாஸ்போட் என்றாளே!

- விகடகவி.

# ஈ.பி.ஆர்.எல்.எவ். சுயேச்சை அணி தேர்தலுக்குப்பின் யாரை ஆதரிக்கும்?

### விளக்குகின்றார் சுபத்திரன்

யாழ்ப்பாணம்,டிசெ.2

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டால், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தேசியக்கட்சிகளின் நிலைப்பாட்டைப் பொறுத்தே, எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்பதை முடிவுசெய்வோம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளரும், மத்திய குழு உறுப்பினருமான தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்).

கட்சியின் யாழ்.அலுவலகத்தில் கடந்தவாரம் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் மூன்று அடிப்படையான விடயங்களை முன்வைத்துள்ளோம். தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு, வடக்கு - கிழக்கில் ஜனநாயக நிலைமையினை உருவாக்கல் மற்றும் அன்றாட விடயங்களை திட்டமிட்ட வகையில் முன்னெடுத்துச் செல்வது என்பனவே அவையாகும்.

அதிகாரப்பகிர்வு எனும்போது அது பரந்த அளவில் அமையவேண்டும். அதாவது வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கக் கூடிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். பொலிஸ், நிர்வாக அதிகாரம், போதிய நிதிவளங்களின் பயன்பாடு மற்றும் சேவைத் துறைகளான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றவற்றில் முற்றுமுழுதான அதிகாரப்பகிர்வு தேவை.

வடக்கு - கிழக்கின் பாரம்பரிய தொழில்களான விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதுடன் சிறு துறைமுகங்களின் பயன்பாடு, கடல்வளங்களின் பயன்பாடு, தமிழ்மொழியின் உபயோகம் போன்றவற்றிலும் அதிகாரப்பகிர்வு வேண்டும். எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பிரயோகித்து நாம் இந்த அதிகாரங்களைப் பெற முயற்சிப்போம்.

அதற்காக ஐக்கிய இலங்கைக்குள் அதிஉச்ச அதிகாரங்களை முன்வைத்து இரு பெரும் தேசியக் கட்சியில் உள்ள முற்போக்காளர்கள், தாராளவாதிகள் போன்றோரின் ஆதரவைப்பெற முயற்சிப்போம். அத்துடன் பெரும்பான்மை புத்திஜீவிகள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் அதிகாரப்பகிர்வு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

அதேவேளையில் பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை முன்வைத்து ஆதரவு திரட்டுவோம். குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, இந்தியா போன்ற பல்லின, பன்மொழிக் கலாசார மக்களைக் கொண்ட நாடுகளின் ஆதரவையும் நாம் திரட்டுவோம்.

பெரும்பான்மை இன மக்களிடம் பிரிவினை தொடர்பாக ஓர் அச்சம் நிலவுகின்றது. அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு விடயங்களை தெளிவுபடுத்தி - அவர்களின் ஆதரவைத் திரட்டுவதன் மூலமே நாம் எமது இலக்கை அடையமுடியும்.

தமிழ் மக்கள் மத்தியில் நாகரிகமான அரசியல் கலாசாரம் ஒன்று தோற்றுவிக்கப்படல் வேண்டும். கடந்த 15 வருடங்களாக அரசியலில் மாறுபட்ட அபிப்பிராயங்களை உடையோர் கொலை செய்யப்படுகின்றனர். இந்த வன்முறை அரசியல் கலாசாரம் தொடர்ந்து கொண்டிருக்கும்வரை கொள்கைகள், கருத்துக்கள், தேடல்கள், வீரியம் மிக்க செயற்பாடுகள் போன்றவற்றை வெளிக்கொண்டு வர முடியாத ஒரு சூழ்நிலை நிலவுவதைத் தடுக்கமுடியாது.

அன்றாட விடயங்களை திட்டமிட்ட முறையில் முன்னெடுப்பதும் எமது பிரதான பணியாக இருக்கும். தற்போதைய சூழ்நிலையை சமாளித்துக் கொண்டு செல்வதோ அல்லது கடந்த காலத்தை மீட்பதோ எமது நோக்கமல்ல. மாறாக சுபீட்சமான, சமாதானமான எதிர்காலத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதில் நாம் மிக உறுதியாக நிற்கின்றோம். அச்சமற்ற, பாதுகாப்பான சூழலை உருவாக்குவதுடன் நவீன முன்னேற்றங்களோடு தொடர்புடையதாகத், தமிழ்மக்களின் வாழ்வு சீரமைக்கப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இவற்றிற்கெல்லாம் மாறாக தேர்தலை நோக்கமாகக்கொண்ட 'ஓட்டுப் போடும்' செயற்பாடுகள் சமூகத்திற்குப் பலனளிக்கப் போவதில்லை. அவை மேலும் மக்களை கையேந்தி வாழ்வதற்கே வழிவகுக்கும். இவ்வாறு த.சுபத்திரன் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மத்திய குழு உறுப்பினரும், கண்ணோட்டம் ஆசிரியருமான ஸ்ரீதரன் கருத்துக்கூறுகையில்:-

குறிப்பிட்ட அரசியல் தீர்வு எமக்குப் பொருத்தமில்லை என்று கூறி நிராகரிப்பவர்கள் அதற்கான மாற்றுத்தீர்வை முன்வைக்க வேண்டும். அதைவிடுத்து எதிர்ப்பு அரசியல் நடத்த வேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. ஒரு கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை எவரும் விமர்சிக்கலாம். அதற்காக கொலைகளைத் தூண்டும்படியான விமர்சனங்கள் எழுவது ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவிக்க உதவாது. மாறாக அது கருத்து வன்முறையைத் தூண்டி, பண்பற்ற அரசியலையே முன்னெடுக்க உதவும். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுபவர்களாகக் கூறுபவர்கள் நாடாளுமன்றக் கதிரைகள் கிடைத்த பின்னர் என்ன செய்கிறார்கள்? சொல்லில் ஒன்றும் செயலில் ஒன்றுமாகவே இவர்களின் அரசியல் நகர்ந்துகொண்டிருக்கின்றது - என்றார்.



பத்திரிகையாளர் மாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) முதன்மைவேட்பாளர் சுபத்திரன் மற்றும் பிரமுகர்கள்.

கட்சியின் வேட்பாளரான கந்தையா சிவராஜா தெரிவித்ததாவது:-

ஒவ்வொருவரும் தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ற வகையில் கூட்டமைப்பை அமைத்துக்கொள்வது தமிழர்களின் பிரச்சினைகளை மேலும் சிக்கல்படுத்தவே வழிசெய்யும். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தெளிவான நிலைப்பாடு எதுவும் இன்றி - அதற்காக நாடாளுமன்றப் பதவிகளை பயன்படுத்தாமல் எதிர்ப்புக்காட்டிக் கொண்டிருப்பதால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை.

தற்போது யாழ்ப்பாணத்தில் சிலர் ஐ.தே.கவிற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். தமிழருக்கு இக்கட்சி செய்த அட்டூழியங்கள் பலவற்றையும் இவர்கள் மறந்து விட்டார்களா? 'அரசியல் தீர்வு' தமிழருக்கு கூடிய அதிகாரங்களை வழங்குகின்றது எனக் கூறி அதனை எரித்த ஐ.தே.க. தமிழருக்கு அதனை விடக்கூடிய அதிகாரங்களைத் தரும் என இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் போல் உள்ளது! இதுதான் வேடிக்கை - என்றார். (ம-9)

### கட்டுத்துவக்கு வெடித்து படுகாயம்

இயற்கைக் கடன் கழிக்கப் பற்றை மறைவிற்குச் சென்ற வயோதிபர் அங்கிருந்த கட்டுத்துவக்கு வெடித்துப் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு வரணி வடக்கு குமிழ் அம்மன் கோயிலடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தன கணபதி (வயது 68) என்பவரே இடது முழங்காலில் வெடிபட்டுக் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

### நாளை

கார்த்திகை 17
ஞாயிற்றுக்கிழமை
திதி : துதியை
பின்னிரவு 1.38 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
மாலை 6.38 வரை.
கரிநாள்
சுபநேரம் : 9.15 - 10.45
ராகுகாலம் : 4.45 - 6.15
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஏதாவது செய்யவும், நல்லமுறையில் உருவாக்கவும் ஏற்ற பருவம் இளமை.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## குஞ்சுகள் விற்பனைக்குண்டு

குறைந்த விலையில் அழகான வெள்ளை, மஞ்சள் நிற LOVE BIRDS குருவி உட்பட எல்லா நிறமும், அத்துடன் தனிக்குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-சுடானியல, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, இணுவில். (மேல்மாடிவீடு, G.S. அலுவலக முன்பாக). (95356)

## 2002ஆம் ஆண்டு நாட்டுக்கு எப்படி?

வியாழனுக்கு ராகுவின் தீய சேர்க்கை, சனிபார்வை தேர்தல் இரத்தக் களரியையும் ஆட்சி மாற்றத்தால் இருபெருங்கட்சிகளுக்கிடையே அரசியல் நெருக்கடிகளும் இழுபறி ஆட்சியும் தொடரும்: சத்யா, 3ஆம் மைல் ஆனைக்கோட்டை. (ஜோதிடக் கணிப்புகளுக்கு நேரில் சந்திக்கலாம்). (95426)

## மணமகள் தேவை

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை பார்க்கும் 30 வயது மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகளின் படத்துடன் நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். செல்வம், மே/பா, சஞ்சித், 40, பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (94449)

## மணமக்கள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற 40 வயது அரச தொழில் புரியும் மணமகனுக்கும் 30 வயது மணமகளுக்கும் பொருத்தமான மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விள.இல.1395 மே/பா உதயன். (94660)

## மணப்பெண் தேவை

சுன்னாகம், வரியப்புலம் பகுதி 1961 ஆஸ்திரேலியா பொறியியலாளருக்கு பட்டதாரி மணப்பெண் தேவை. பன்னிரெண்டில் செவ்வாயுண்டு முழு விவரம், ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்: விள.இல.1407, மே.பா. உதயன். (95007)

## மணப்பெண்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1965, வர்த்தகர், 1973, கூட்டுறவு ஊழியர், 1975, செவ்வாயுள்ள வங்கிப் பாதுகாவலர் ஆகியோருக்குத் தொழிலுள்ள மணப்பெண்கள் தேவை: ஜாதகம், முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விள.இல.1406, மே.பா. உதயன். (95009)

## தவறிவிட்டது

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரது கைச்சங்கிலி, 27.11.2001 அன்று யாழ்ப்பாணத்துக்கும் சில்லாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவாஸ் ஸ்ரூடியோ, பண்டத்தரிப்பு சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (95327)

21/18, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கைச் சேர்ந்த பகாரதரூபன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.821203244V), விசேட அ.அட்டை (இல.0902010602), பாடசாலை அனுமதி அட்டை என்பன திருநெல்வேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (95462)

## ஆங்கில வகுப்புகள்

புதிய வகுப்புகள் ஆரம்பம். ஆங்கில இலக்கியம் (தரம் 10,O/L), ஆங்கில பாஷை (தரம் 6-O/L), இலக்கணம் (Grammar). பொது ஆங்கிலம் (A/L) பலவருட அனுபவமுள்ள லண்டன் பட்டதாரி ஆசிரியரினால் வகுப்புகள் நடத்தப்படும். தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (95393)

## வீடு வாடகைக்கு

யாழ்.செயலகம் - சுண்டுக்குளி சம்.த்திரிசியார் கல்லூரிக்கு அண்மையில் 47, (60/3) இராசசிங்கம் வீதி, (பழைய பூங்கா வீதி) யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 60/40 இராசசிங்கம் வீதி, யாழ்ப்பாணம். (95453)

## விற்பனைக்கு

கலர்மீன் வகைகள், லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை), மோட்டார்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைககு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (95306)

40 நாள்கள் நிரம்பிய கறுப்பு, மண்ணிறம், வெள்ளை, பொம்மேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.(95399)

அச்சுவேலி பண்ணையில் இருந்து பெறப்பட்டு ஆறு மாதம் வளர்ந்த முட்டையிடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.98, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (95405)

பொமனேரியன் நாய்க்குட்டி, லவ்பேட்ஸ் குருவி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சீ.ஞானசேகரம், (ஆண்டவர்), ஆனைக்கோட்டை, சாவல்கட்டு. (95324)

நொக்கியாட் HAND PHONE விற்பனைக்குண்டு. தொடர்பு:S.குமார், கொக்குவில். T.P.2961. (95448)

ஆறுமாதம் பாவித்த 300 அங். திரைக்குரிய சனியோ புறொஜெக்ரருக்குரிய (Bulb), பல்ப் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42/7, சி.கனகசபை, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (95429)

## A/L பௌதிகவியல் 2002/2003

பௌதிகவியல் இணைந்த கணிதம் அனுபவம் நிறைந்த ஆசிரியரினால் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. அலகு ரீதியான மீட்டற் பயிற்சிகளும், தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படுகிறது. முழுப்பாடத் திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். தொடர்பு: R.பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip.in.Ed.17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (95420)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் புறொயிலர், கல்பேட் என்பன சுத்தம் செய்து, (பாதிக் கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (95019)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (95401)

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (95451)

BROILER மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (95013)

## பற்றைக்குள் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு,டிசெ.2

தம்பதெனியவில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் புதர்களுக்கிடையே கிடந்த ஆணின் சடலம் ஒன்றைப் பொலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை தம்பதெனிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார். (ஐ-4)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஏழாலை சிவபூதவராயர் ஆலயம்

எமது ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி தந்துதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சர்

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்

வலி.தெற்கு சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர்

உயர்திரு. கே.கமலசேகரன் J.P.

(பாபு) அவர்களையும்



நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஏழாலை சிவபூதவராயர் கோயில் பரிபாலன சபையினர்.

(95454)

## மரண அறிவித்தல்

### சின்னையா அகிலேஸ்வரன B.Sc.

(இளைப்பாறிய ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

மல்லாகத்தை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அகிலேஸ்வரன் 29-11-2001 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதிகளின் ஏக புத்திரனும், திரு.திருமதி கதிரவேலுவின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், பகிரதி (லண்டன்), சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹரிராமின் (லண்டன்) அன்பு மாமனாரும், கோபிகாவின் பேரனும், திருமதிகளான க.சுப்பிரமணியம் (கொழும்பு); ச.அரசரத்தினம் (லண்டன்), சா.சிவஞானசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், அருளானந்தம், சச்சிதானந்தர் (சச்சி மாஸ்ரர், கொழும்பு), சொக்கநாதன் (லண்டன்), சபாதிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரன், சதாசிவம், கௌரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 30/3(3), ரிஜ்வே பிளேஸ், கொழும்பு-4 என்ற முகவரியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று (02.12.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தகனத்திற்காக மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

திரு. க. அருளானந்தம்
திரு.க. சபாதிப்பிள்ளை.

*பாடசாலை ஒழுங்கை,*
*மல்லாகம்.*

(C/19588)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 05-12-2001



### பச்சிலைப்பள்ளி மக்களின் வாக்கு கிளிநொச்சி மாவட்டத்தின் தந்தைக்கே!

கிளிநொச்சித் தொகுதியை பலவித எதிர்ப்புக்களின் மத்தியில் அரசுடன் போராடி இலங்கையின் 25ஆவது மாவட்டமாக உருவாக்கி, சரித்திரம் படைத்த செயல் வீரன்! கிளிநொச்சி மாவட்டத்தின் தந்தையென போற்றப்பட்டவர் வேறு யாருமல்லர், நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த துணைத் தலைவருமாகிய நம் பேரன்புக்குரிய தமிழர் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களே!

கிளிநொச்சித் தொகுதியின் அபிவிருத்திக்காக அயராது உழைத்து, எமது பிள்ளைகளில் அநேகர் வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளர்களாக, பட்டதாரிகளாக உருவாக்குவதற்குக் காரணமாயிருந்த எமது கிளிநொச்சித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானவருக்கு பெரும் ஆதரவு வழங்கி, நம் தலைவனைத் தேர்ந்தெடுப்போமாக!

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

1 2 3X 4 5 6 7 8 9 10 11 12

- பச்சிலைப்பள்ளி மக்கள்.

(94889)

## அறிவித்தல்

பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்,

*வட மாகாணம்.*

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் **வீரசிங்கம் ரகுநாதனை** ஆதரித்து மணிக்கூடு சின்னத்திற்கும், விருப்புவாக்கு இலக்கம் 10இற்கும் புள்ளடியிடுமாறு **கேட்டுக்கொள்கின்றோம்.**

| | X | 10 |
|---|---|---|

தலைவர்/பொது முகாமையாளர்,
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்,
மல்லாவி. (94890)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,

*சண்டிலிப்பாய்*

மேற்படி ஆலய புனரமைப்புக்கென 400,000/= ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் 200,000/= ரூபாவை எமக்கு வழங்கி உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்


கே.என்.டக்ளஸ் தேவானந்தா


அவர்களையும் -

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளராகிய

உயர்திரு. K.V.குகேந்திரன்

(ஜகன்) அவர்களையும் -





மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர்

திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா)

அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர்,
*சண்டிலிப்பாய்.*

(95454)

## கண்ணீர்ப் பூக்கள்

முன்னாள் கிருஷ்ணா நகை மாளிகை உரிமையாளரும் பிரபல நகை வியாபாரியுமான

**சபாபதி வரதராசா** (ஒப்பிளாமணி மாமா)

(காரைநகர்)

அவர்கள் திடீரென மறைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு, எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

தற்போதைய முகவரி:
*இல.3/25, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வி.எம்.கே.ஜுவல்லர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(95459)

## விரைவில் நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்



வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர்

### திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள்

விரைந்து நலம் பெற எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*- வடமராட்சி மக்கள்.*

(95442)



## ஐக்கிய தேசியக் கட்சி

தேர்தல் - 2001

அல்லல் அறுத்து ஆனந்தமாக்க
தங்கள் பொன்னான வாக்குகளை
எமக்களியுங்கள்.





தி.மகேஸ்வரன்
இல. 4
முதன்மை வேட்பாளர்

எல்.திலகநாயகம் போல்
இல. 9
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.

(94862)



## நாடாளுமன்றத் தேர்தல் - 2001

யாழ்.மாவட்டம்



### திருமதி இராஜதேவி திருநாவுக்கரசு

- ▲ கொடிய யுத்தம் வேண்டாம்.
- ▲ அவல வாழ்க்கை போதும்.
- ▲ சுயநிர்ணய உரிமை எமது பிறப்புரிமை.
- ▲ சிங்கள பௌத்த பேரினவாதத்தை மற்றும் முண்டு கொடுப்போரைத் தோற்கடிப்போம்.
- ▲ பெண்கள் உரிமை காப்போம்.

**எங்களுடன் கைகோருங்கள் எங்களை ஆதரியுங்கள்**

X 10

**புதிய இடதுசாரி முன்னணி(NLF)**

(C/19565)



## யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்

கரவெட்டி

பரிசளிப்பு விழாவும்
ஸ்தாபகர் நினைவு தினமும் -
2001

அமரர் பொன். கணபதிப்பிள்ளை
மரகதவல்லி தம்பதியர் நினைவாக

*காலம்:* இன்று (02.12.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி
*தலைவர்:* திரு. க.பொன்னையர் (அதிபர்)
*பிரதம விருந்தினர்:* திரு சி.சிற்றம்பலம்
(அதிபர், யா/நெல்லியடி ம.ம.வி., கரவெட்டி)
*நினைவுப்பேருரை:* ஸ்ரீலஸ்ரீ கை.நமசிவாயக் குருக்கள்
(ஆசிரியர், யா/வேதாரணிஸ்வரா வித்தி.)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்.

(95452)



## கண்ணீர் அஞ்சலி



அமரர்

ஏரம்பு பேரம்பலம்

28-11-2001 புதன்கிழமை தீவுப்பகுதி நாரந்தனையில் வைத்து தேசவிரோதக் கும்பல்களினால் படுகொலை செய்யப்பட்ட அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். (95446)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

2001






**அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!**

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட திரு.நடராஜா இரவிராஜ் அவர்களை மீண்டும் இத்தேர்தலிலும் ஒரு வேட்பாளராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிறுத்தியுள்ளது.

நடராஜா இரவிராஜ் எங்கள் மண்ணுக்குச் சொந்தமானவர். அவரின் தந்தையார் ஆசிரியர் V.T.நடராஜா இம்மண்ணிலே பிறந்து வளர்ந்தவர். அவரின் பூட்டனார் வேலுப்பிள்ளை உபாத்தியாயர் கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையை நிறுவி, எம்மக்கள் கல்விபெற வாய்ப்பளித்தவர். இரவிராஜ் அவர்கள் சாவகச்சேரியில் பிறந்து, கொல்லங்கலட்டியில் வாழ்ந்து, புகழ்பூத்த யாழ்.பரியோவான் கல்லூரியில் பயின்று, சட்டம் பயின்று இன்று ஒரு புகழ்பூத்த சட்டத்தரணியாகத் திகழ்கின்றார்.

இரவிராஜ் இளைய தலைமுறையின் ஆற்றல் மிக்க, ஆளுமையுடைய இனிய தலைவர், நாடறிந்த நாவண்மை மிக்கவர். இவர் ஒரு மனித உரிமைகள் ஆர்வலர். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல மனித உரிமைகள் அமைப்புக்களுடன் தொடர்புடையவர்.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு அவதியுறும் எம் இளைஞரை வெலிக்கடை, களுத்துறை, பூசா, அனுராதபுரம் சிறைச்சாலைகளுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து அவர்களது விடுதலை வேண்டி உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் வாதாடி வருபவர்.

யாழ்.மாநகரசபை நிர்வாகத்தை ஏற்கப் பலரும் தயங்கிய காலகட்டத்தில் உறுதியுடன் தேர்தலில் நின்று சீரழிந்த யாழ்ப்பாணம் நகரை மீண்டும் கட்டியெழுப்ப முன்வந்து மாநகரசபை முதல்வராகப் பணியாற்றி வருகின்றார். தமிழினத் தலைநகரில் தமிழாட்சி மீண்டும் நிலைபெற, நாம் தலை நிமிர்ந்து வாழ வழிவகுத்தவர்.

எனவே, இத்தேர்தலில் அவரை ஆதரிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாம் உதயசூரியனுக்கு நேரே ஒரு புள்ளடியிட்டும், உங்கள் விருப்புவாக்கில் ஒன்றை நடராஜா இரவிராஜின் இலக்கமாகிய 9 இற்கு மேல் புள்ளடியிட்டு அவரின் வெற்றிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

**வெற்றி இலக்கம்** 9 9

உண்மை- நேர்மை- இலட்சியத்திற்கான அயராத உழைப்பு.

- மாவை கொல்லங்கலட்டி மக்கள்.

(93915)



## நெஞ்சம் மறவாத மூன்றாண்டு நினைவலைகள்

மலர்வு
31
♦
01
♦
1949



உதிர்வு
05
♦
12
♦
1998

### திருமதி ராணி ஜெகசோதி (கலையன்னை)

*(ஆசிரியை, சென்.ஜோசேப் கல்லூரி - திருகோணமலை)*

திதி: 02-12-2001 (துதியை)

எம் குடும்பத்தின் மூத்த செல்வமே!
எம்மை விட்டு எங்கம்மா சென்றாய்?
ஒளியாகப் பிரகாசித்த உன் புகழ் எங்கே?
விழிநீர் மல்க நாம் வெதும்புகின்றோம் இங்கே.
ஊர் போற்ற நீ வாழ பூரித்தோம் நாம்
உன் புன்னகையைக் காணாமல் ஏங்குகிறோம்
ஏக்கத்துடன் நாம் வாடுகின்றோம்.
எம் இதயம் இனி ஆறாதே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*198,சென்.பெனடிக்ற் றோட்,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


(C-19578)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கம்மாலை வீதி, சண்டிலிப்பாய் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக ரூபாய் 310,000/= (மூன்று லட்சத்து பத்தாயிரம்) நிதி ஒதுக்கி, அதில் முதற் கட்டமாக ரூபா 155,000/= (ஒரு லட்சத்து ஐம்பத்தையாயிரம்) உடனடியாகத் தந்து உதவியமைக்காக,



அபிவிருத்திச் சாதனையாளர்
மாண்புமிகு அமைச்சர்
திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்



மானிப்பாய் பண்புமிக்க
பிரதேச சபைத் தலைவர்
திரு.
வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
(ஜீவா) அவர்களுக்கும்

எமது உளப்பூர்வமான
நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கம்மாலை வீதி,
சண்டிலிப்பாய் மக்கள்.

(95463)



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலய புனரமைப்புக்கென முதற் கட்டமாக ரூபா ஒரு லட்சத்தை தந்துதவிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல் அமைச்சரும் இந்து கலாசார அமைச்சருமான மாண்புமிகு
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும் -



யாழ்.மாவட்ட முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. K.V.குகேந்திரன் (ஜகன்)
அவர்களையும் -



வலி.மேற்கு
பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.ந.திரிலோகநாதன் (லோகன்)
அவர்களையும் -

(95469)

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குளத்தடி லேன்,
சங்கானை.

சங்கானை ஸ்ரீ பேச்சி அம்பாள்
ஆலய பரிபாலன சபை



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கல்வளைப் பிள்ளையார் கோயில்,**
**சண்டிலிப்பாய்**

மேற்படி ஆலய புனரமைப்புக்கென 2,00,000/= ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் 1,00,000/= ரூபாவை எமக்கு வழங்கி உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம
அமைப்பாளராகிய
உயர்திரு. K.V.குகேந்திரன் (ஜகன்)
அவர்களையும்



மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர்
திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
(ஜீவா)
அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்வளைப் பிள்ளையார் கோயில்
தர்மகர்த்தா சபையினர்,
சண்டிலிப்பாய்.

(C-19589)



## பொதுத் தேர்தல் - 2001

## 05-12-2001





☞ எம் இனம் தலை நிமிர்ந்து நின்றிட....
☞ பனையினை நம்பி வாழ்வோரின் துயர் களைந்திட...
☞ சீவல் தொழிலாளர்களின் இழந்த சொத்துக்களை மீட்டிட...
☞ பறிக்கப்பட்ட வடிசாலை மற்றும் தலைமைத்துவத்தை மீண்டும் பெற்றிட...
☞ சீவல் தொழிலாளர்களின் பிரதிநிதியை நாடாளுமன்றம் அனுப்பிட...
அளித்திடுவோம் எம் வாக்குகளை

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.வி.ஜி.தங்கவேல்** அவர்களுக்கே...

உதயசூரியன் சின்னத்துக்கும் இலக்கம் 10 க்கும்

புள்ளடியிடுவோம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

பனை, தென்னை வள
சகோதர நண்பர்கள்.

(94893)



## பொதுத் தேர்தலில் புதுவரலாறு படைக்க

## வெற்றி உறுதியாகிவிட்டது!

☆ தமிழினத்தின் விடுதலைக் குரலை -
☆ உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலை -
☆ அனைத்து ஒடுக்குமுறைக்கும் எதிரான மக்களின் போர்க்குரலை -

நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல
தென்னிலங்கை முழுவதும் ஒலிக்கச் செய்ய
உங்கள் தெரிவு

## மணிக்கூட்டுச் சின்னம்



சி.கா.செந்தில்வேல்
முதன்மை வேட்பாளர்
இலக்கம்.8



சோ.தேவராஜா
சட்டத்தரணி
இலக்கம்.12

**வட்டுக்கோட்டை தொகுதி மக்கள்**



மு.தியாகராசா
இலக்கம் 8



தி.இராம்குமார்
இலக்கம் 8

(மாபெரும் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் பண்டத்தரிப்பு, சாந்தையில் இன்று பி.ப.4.00 மணிக்கு இடம்பெறும்)

(94891)



## மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு!

**வணக்கம்;**

வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாகத்தில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சையில் தோற்றி, போதுமான புள்ளிகளைப் பெற்றிருந்த போதும் நீண்டகாலமாக எமக்கு நியமனங்கள் கிடைக்காமல் இருந்தது. இதனால் மிகவும் விசனமுற்றிருந்த நாங்கள் உங்களை அணுகினோம். எமது முறைப்பாட்டுக்குச் செவிசாய்த்த நீங்கள், பல்வேறு பணிச்சிரமங்களுக்கு மத்தியிலும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டும், அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் வாயிலாகவும் எமக்கொரு விடிவு காலத்தை ஏற்படுத்தித்தந்துள்ளீர்கள்.

அரசாங்க வேலைவாய்ப்பு பெறுவதை தமிழ் மானக்குறைவாகவும், அரசுகைமாகவும், சித்திரித்துக் காட்டிக் கொண்டிருப்பவர்கள், எமது வாழ்க்கையின் நாளாந்தப் பிரச்சினைகள் தீர உதவித பங்களிப்பையும் வழங்குவதில்லை. வேலைவாய்ப்பு பெறுவதன் மூலமாக எமது குடும்பங்களின் அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு வழி கிடைத்துள்ளது.

எனவே, எங்களது பிரச்சினைகளை அக்கறையுடன் கவனத்திலெடுத்து ஆவேசத்துடன் பாடுபட்டு எமது எதிர்காலம் சிறக்க வழிகாட்டிய உங்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றோம். இதற்காக நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாண எழுதுநர் மற்றும் அதேனோடு இணைந்த சேவைகள் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் சங்கம்.

**எதிர்காலம் சிறக்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் வீணைச் சின்னத்துக்கே வாக்களிக்கும்படி அனைவரையும் வேண்டுகின்றோம்.**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

(94892)

# யுத்தத்திற்கு, வன்முறைக்கு உங்கள் தீர்வு என்ன?



இங்கே காணப்படும் கூப்பனில் நீங்கள் தெரிவு செய்த தீர்வின் முன்னால் உங்களின் விருப்பத்தை புள்ளடி ☒ போட்டு கூப்பனை வெட்டி எங்கள் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**சமாதானத் தேர்தல் 2001**

சமாதானத்திற்கு வழி

பேச்சுவார்த்தை | ஆம்

யுத்தம் | ஆம்



සාමය PEACE சமாதானம்

මහජන සාම පෙරමුණ
மக்கள் சமாதான முன்னணி
People's Peace Front
12/14 புராண விகாரை வீதி, கொழும்பு 06.
தொலைபேசி: 01-818344, 854127 பக்ஸ்: 01-819064
E-mail:peace2@sri.lanka.net

BEAT

# ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம்
## ஓதுவார்/ அலுவலர் தேவை

சிங்கப்பூரில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு ஓதுவார்/அலுவலர் தேவை. பின்வரும் தகைமைகள் உள்ள ஆண்கள் விண்ணப்பிக்கவும்.

**தகைமைகள்:**

☆தேவாரப் பண்ணிசையை முறையாகக் கற்றிருத்தல் அல்லது கர்நாடக சங்கீதம் முறையாகப் பயின்று ஓரளவு பண்ணிசை தெரிந்திருத்தல்.

☆A/L வரை படித்து சிறு அளவிலான அலுவலகக் கணக்குகளை நிர்வகிக்கும் திறமை.

☆ சைவ போசனமாக இருக்க விருப்பம்.

☆ வயது 45 இற்குள் இருத்தல

மேலே குறிப்பிட்ட தகைமைகள் உள்ளோர் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பங்களைச் சான்றிதழ்களோடு அனுப்பி வைக்கவும். தங்குமிட வசதியும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

**K.SRIKUMARAN**
BLK 211,JURONG EAST ST 21
# 03 - 317 SINGAPORE 600211.

(C-19566)

# எங்கள் வாக்கு சுரேஷிற்கே!



கோப்பாய் கோமான் வன்னியசிங்கம்
சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை
அடலேறு ஆலாலசுந்தரம்
இவர்களது மண்ணில்
மண்ணின் மைந்தன் சுரேஷ் பிரேமச்சந்திரன்.
இனப் பிரச்சினையில் ஆழ்ந்த புல்மை,
இனவாதிகள் மத்தியில் தனது மக்களுக்காக துணிச்சலான பேச்சு.
ஆயுதப் போராட்டத்திலும், ஜனநாயகப் போராட்டத்திலும்
- இருபத்தைந்து வருட அனுபவம்.
சர்வதேச கருத்தரங்குகளிலும், ராஜதந்திரிகளுடனான தொடர்களிலும்
- நீண்ட பரிச்சயம்.
தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த போதெல்லாம்
நாடாளுமன்றத்தில் "சண்டைக்கோழி" என வர்ணிக்கப்பட்டவர்.
யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, கௌரவமான தீர்வு
இவற்றுக்கு, நாடாளுமன்றத்திலும், சர்வதேச ரீதியிலும்
அழுத்தங்களையும், நெருக்குதல்களையும் உருவாக்கவும்,
ஐக்கியத்தை வலுப்படுத்தி தீர்வினை எட்டுவதற்கு
மிகச் சரியான உங்கள் தெரிவு.

# சுரேஷ் பிரேமச்சந்திரன்

☒ 4

தமிழர் விடுதலைக் கூட்டணி ☒

| 1 | 2 | 3 | ☒4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

- நண்பர்கள், ஆதரவாளர்கள்.

(94910)



# பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்
## என்றும் உங்கள் சேவையில்

உங்கள் வாக்கு யாழ்.மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

## திரு.கா.சந்திரராசா (SLAS)

அவர்களுக்கே!


(ஓய்வுபெற்ற பிரதேச செயலர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, நிர்வாக அதிகாரி (A.O.) யாழ்.கல்வித் திணைக்களம்)

(94855)

☒ 7 ☒

- அராலி வாழ் மக்கள் -

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001
## யாழ். மாவட்டம்
# முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்
# ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



மேன்மை தங்கிய கொலின்பவல்,
ஐக்கிய அமெரிக்க இராஜாங்க செயலாளர்,
2001C NW வீதி,
வாஷிங்டன் - D.C 20520,
ஐக்கிய அமெரிக்கக் குடியரசு.

G.ஆனந்தகுமார்,
பொற்பதி வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீலங்கா.
தொ.பே. - (94) 213442
தொலைமடல் - (94) 212953
30-11-2001

மேன்மை தங்கிய ஐயா!

கீழ்க் காணும் விடயங்களை தங்களின் கவனத்தில் சமர்ப்பிக்க முதற்கண் தங்களிடம் அனுமதி கோருகிறேன்.

ஞானசுந்தரம் ஆனந்தகுமார் ஆகிய நான், எதிர்வரும் 5ஆம் திகதி நடை பெறும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகிறேன்.

இலங்கையில் உள்ள பல கட்சிகள் தங்கள் கட்சிகளின் சார்பில் போட்டியிடுமாறு என்னை வேண்டிக்கொண்டன. தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் மதத்தால் வேறுபட்டாலும், மொழியால் இணைந்தவர்கள். கலை, கலாசார பண்பாட்டுக் கூறுகளால் ஒன்றுபட்டவர்கள். என்றாலும் இவர்களிடையே சந்தர்ப்பவாத சுயநல அரசியல்வாதிகளால் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விரிசலை நீக்கி, இரு சமூகத்தையும் ஒற்றுமையாக இணைக்கவே நான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றேன். இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் பேதமின்றி ஒற்றுமையாக வாழ வைப்பதே எனது குறிக்கோளாகும்.

எனது தேர்தல் பிரசாரத்தை நேர்மையாகவும், சமாதானமாகவும், வன்முறையற்ற ரீதியிலும் செயற்படுத்துவதே எனது நோக்கமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்து 53 வருடங்களாகின்றது. இலங்கையை ஆட்சி செய்த இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இதுவரை இனப்பிரச்சினையை ஒழுங்காகக் கையாளவில்லை. இத்துடன் சிறு கட்சிகளும் உள்நாட்டில், வெளிநாடுகளில் தங்கள் அரசியல் சுயலாபத்துக்காக விடுதலைப் புலிகளின் அரசியலைத் துரும்பாகப் பாவிக்கின்றனர். தொடர்ந்து வந்த அரசுகள் தமிழர் உரிமைகளைப் புறந்தள்ளி வந்ததாலும், தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டதாலும் விடுதலைப் புலிகளான போராளிகள் தங்களுக்கு நியாயத்தைக் கோரவும், சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்கவும் களத்தில் இறங்கினர்.

சிஹல உறுமய என்று புதிதாக உருவாக்கப்பட்ட சிங்கள இனவாதக் கட்சி ஒரு வருடத்திற்கு முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அனைத்து மாவட்டங்களில் போட்டியிட்டு ஒரு பிரதிநிதித்துவத்தையேனும் பெறமுடியவில்லை. நாடு தழுவிய ரீதியில் விழுந்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஓர் ஆசனம் கிடைத்தது. இம்முறை தேர்தல் பிரசாரத்தில் சிஹல உறுமய தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்புக் கொள்ளத்தக்க வகையில் இனவாதப் பிரசாரங்களைச் செய்வதுடன் விடுதலைப் புலிகள் முழுச் சிங்கள் சமூகத்தையே சங்காரம் செய்யவந்த படுகொருரப் பயங்கரவாதிகள் என முதன்மைப்படுத்தி பிரசாரம் செய்கின்றது. தென்னிலங்கையில் தோற்றம் பெற்ற மக்கள் விடுதலை முன்னணி 71 - 88 - 89 ஆம் ஆண்டுகளில் சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தியபோதும் அது விடுதலைப் போராட்டமாகக் கருதப்பட்டது.

தொடர்பு ஊடகங்களின் ஊடாக இவற்றைப்பற்றி நீங்கள் அறிந்ததைவிட இலங்கையில் உள்ள இராஜதந்திர வட்டார்களுக்கும் தங்களின் தூதரகத்திற்கும் இது தொடர்பாக அதிகம் தெரியும்.


தங்களின் நாட்டிலிருந்து எமது நாட்டுக்குக் கிடைத்த அபிவிருத்தி உதவிகளுக்கும் ஏனைய நிவாரணங்களுக்கும் எமது நாட்டு மக்கள் நன்றிக்கடனாக இருப்பார்கள் எனக் கூறிக்கொண்டு எங்களின் போராட்டத்தை இனங் கண்டுகொள்ளுங்கள் எங்களது வெளியுறவு அமைச்சர் தங்களின் நாட்டில் இப்போராட்டத்தை திரிபுபடுத்துகின்றார்.

நீங்கள் படைத் தளபதியாக இருந்துள்ளீர்கள். இங்கு நடைபெறுவது யுத்தமல்ல. குழுவொன்று தமது உரிமைகளை வென்றெடுக்க ஆயுதப் போராட்டம் நடத்துகின்றார்கள் என்பதை தங்களின் அனுபவத்தினூடாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.


நான் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் நிச்சயமாக வெற்றியடைவேன் என்பது திண்ணம். நான் நாடாளுமன்றம் சென்று சத்தியப்பிரமாணம் செய்யும் முன்பு தமிழ் மக்களைச் சந்தித்து விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளல்லர். அவர்கள் தமது இனத்திற்காகப் போராடும் போராளிகள் என்றும் மகஜரில் அவர்களின் கையெழுத்தை வாங்கி தங்களின் தூதரகத்தின் ஊடாக தங்களுக்கு அனுப்பிவைப்பேன்.

நன்றி.

உங்களைக் கௌரவப்படுத்தும்
ஞா.ஆனந்தகுமார்.



பிரதி: உயர் ஸ்தானிகர்,
ஐக்கிய அமெரிக்கக் குடியரசு,
உயர் ஸ்தானிகராலயம்,
காலி வீதி,
கொழும்பு.




(C/19583)

# PARLIAMENTARY GENERAL ELECTION - 2001
# AN APPEAL TO THE U.S. SECRETARY OF STATE

## By Mr.GNANASUNDERAM ANANDAKUMAR

### SOLE TAMIL CANDIDATE OF THE SRI LANKA MUSLIM CONGRESS IN THE JAFFNA DISTRICT

**G.Anandakumar**
**Telephone (94) 213442**
**Fax (94) 212953**

**Potpathy Road,**
**Kokuvil,**
**Jaffna,**
**Srilanka.**

**November 30.2001.**

**His Excellency Mr.Collin Powell**
**U.S. Secretary of State**
**Department of State**
**2201 C Street NW**
**Washington DC 20520**
**United States of America**



**Your Excellency,**

Please permit me to place the following for Your kind and urgent consideration

I Gnanasundram Anandakumar, am a candidate at the forthcoming Parliamentary Elections due to be held in Srilanka on December 5.2001 representing the Srilanka MuslimCongress (SLMC) in the Jaffna District.

Prior to my accepting the nomination of SLMC I was invited by several political parties in Srilanka to contest the elections from their respective parties. My decision to contest from the SLMC was due to my conviction that as Tamil speaking people Tamlis and Muslims except for religious differences, culturally and traditionally have much in common, yet unfortunately remain estranged due to thouse who capitalize on situations and circumstances for their own benefit. I as a Tamil candidate contesting through the SLMC seek to unite together all Tamil speaking people in this Country. It is also my vision to work steadfastly towards uniting all citizens, irrespective of religion, caste to or creed live as brothers and sisters as one family of Mother Lanka.

Amongst my policies are the conduct of a clean election campaign in keeping with the laws of the land and importantly a campaign devoid of violence in any form.

The two major political parties in our 53 years of Independence - The United National Party and The Srilanka Freedom Party have over the years miscalculated in handling the ethnic strife, where even the smaller parties too take political advantange through statements issued both locally and abroad and their actions are using the Liberation Tigers of Tamil Elam (LTTE) issue as a political tool. LTTE terrorism could be defined as a precipitated result of a struggle to eliminate the denial of legitimate rights of the Tamils resulting in their demand for self determination, due to the short sighted and ultra extremist policies of successive governments, combined with state sponsored terrorism on those who struggle for their respective community's rights.

In this regard the Siyala Urumaya, a recently formed political party who contested the last Parliamentary Elections held a year ago was not able to secure at least a single seat, although they fielded candidates in every district. The total votes polled in all of the districts were considered for their being offered a bonus seat that enabled this party to send one candidate to Parliament.

On this occasion the Siyala Urumaya with statements capable of instigating racial animosity against the Tamils ara interpreting the struggle of the LTTE as an ultra terrorist outfit seeking to destroy the Sinhala mojority community and virtually overrun the Country. They should also remember that the Janatha Vimukthi Peramuna (JVP) a southern Sinhala political party resorted to militant struggles in 1971 and 1988 - 89 period against Sinhala Governments, which are referred to as Liperation struggles.


More than what is expressed in the electronic and print media your Embassy in Colombo as well as the Diplomatc community in Sri Lanka are aware of these facts to a much greater extent.

The aid packages, infrastructural development projects and all other assistance granted by your great nation will always be remembered wiht much gratitude by our citizens and we request that the causes of the Tmil struggle be identifed and not permit distorted views of the actual situation as presented by our Foreign Minister to only obtain further aid.

Your Excellency, with your vast experience as Commander of US Forces you will agree that ours is not a war but a struggle by a group who for a cause have become militants to fight for the rights of their minority community.

I am confident of victory at the polls on December 5,2001, but before taking my oath of office as a parliamentarian, I propose to visit each household to obtain signatures of the people evidencing that the activities of the LTTE are not as what is portrayed but as a just cause on behalf the Sri Lankan Tamils wihch I shall present through your Ambassador at the US Embassy in Colombo.

Thanking you Your Excellency,
Yours respectfully
G.Anandakumar




**C.C. His Excellency The Ambassador**
**Embassy of the United States of America**
**Galle Road**
**Colombo 3.**


(C/19584)

# மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்க வேண்டும்

## மு.சிவசிதம்பரம்

(தலைவர், த.வி.கூ.)

ஈழப்போராட்டம் ஒரு புதிய பரிமாணம் எடுத்தபோது இளைஞர்கள் ஆயுதம் தாங்குவது அவசியம் என்று நினைத்தவர்தான் அமிர்தலிங்கம். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, ஆயுதம் பெறுவதற்காக நாங்கள் இந்தியாவிடம் எவ்வளவு வாதாடி இருப்போம்....? ஆனால் இன்றைக்கு ஆயுதம் ஈழப் போர்முனையிலேயே கிடைக்கிறது. காரணம், தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுத ஏஜண்டுகளின் போராட்டமாக மாறிப் போய்விட்டதுதான்! இந்த ஆயுத ஏஜெண்டுகளுக்குப் போர் நடந்து கொண்டிருந்தால்தான் வியாபாரம் நடக்கும். அதனால் அமைதி ஏற்பட அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.



பதினைந்து, இருபது ஆண்டுகளாக எங்கள் மக்கள் உழைக்கவில்லை; படிக்கவில்லை. மரத்துப்போன வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பையன்கள் அறிவு வருவதற்கு முன்பே ஆயுதம் ஏந்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் கண்டு மக்கள் பயப்படுகிறார்கள்; பணம் கொடுக்கிறார்கள். அதனால் துப்பாக்கிதான் அதிகாரத்தை வழங்குகிறது என்று மனோ ரீதியான முடிவுக்கு எங்கள் பையன்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அறிவுபூர்வமான தலைவர்களை அழிப்பது ஓர் இயக்கத்தை சிதைக்க முதல்வழி. அதன் விளைவுதான் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் கொல்லப்பட்டது. இதை யார் தூண்டுகிறார்கள்?

இந்தியாவின் உளவு நிறுவனமான 'றோ'(RAW) அதிகாரி உன்னிகிருஷ்ணனைப் பிடித்து இந்தியாவின் ராணுவ ரகசியங்களைப் பெற்றவர்கள் அமெரிக்கர்கள். அவர் களுக்கு இந்தியாவுக்கு ஆதரவான சக்திகள் வேறு நாட்டில் இருப்பது என்றைக்கும் பிடிப்பதில்லை. அதனால் இந் தியாவின் நல்லுறவுக்காகப் பாடுபட்டவர்களை பகை முடிக்கிறார்கள். அதுவும், எங்கள் பையன்களைக் கொண்டே!

எவ்வளவு இழப்புக்கள் எங்களுக்கு? இதுவரை அரவணைத்த தமிழ்மக்கள் எங்களை சந்தேகக்கண் கொண்டு பார்க்கிறார்கள்! எல்லாவிதத்திலும் ஈழத்தமிழர்களுக்காக உதவிய வெளிநாட்டுத் தமிழர்கள் விரக்தி அடைந்து ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர், 'இவர்கள் தொல்லையே வேண்டாம்' என்று ஒதுங்குகின்றார். அகதிகளாக வந்த மக்களை வெளிமாநிலத்துக்கு அனுப்புகிறார்... இனி, என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத சூழ்நிலை. தினமும் ஒரு திருப்பம்.

மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்று நடத்தும் போராட்டம் வெல்லும்; துப்பாக்கிகள் அமைதியைக் கொண்டுவராது. அது போராளிகளுக்குப் புரியும்வரை பொறுத்திருப்பதுதான் ஈழத்திலுள்ள ஜனநாயக வாதிகளுக்கு உள்ள ஒரே வழி! என்று நம்பிக்கையோடு சொல்கிறார் அந்த எம்.பி.


சந்திப்பு :- திலீபன்.

**த.வி.கூ. செயலதிபர் அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் த.வி.கூ. தலைவர் மு.சிவசிதம்பரம் சென்னையிலிருந்து வெளிவரும் "இதயம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியிலிருந்து இது தரப்படுகிறது.**

(C/19582)

**துப்பாக்கிகள் அமைதியைக்கொணர்டுவராது; அமைதியைக் கொணர்டுவரப்பாடுபடும் போராளிகளுக்கு வாக்களியுங்கள்.**

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



X

# விழிமூடிப் போனாலும் வழிகாட்டும் ஒளிச்சுடர்கள்!


மு.ஆலாலசுந்தரம்

1986இல்
நாடாளுமன்றப் பதவிகள்
துறந்தீர்!
பரிதவித்து நின்ற
மக்களின் மத்தியில்
நிராயுதபாணிகளாக
நம் மண்ணில்
நிமிர்ந்து நின்றீர்கள்!
விடவில்லை!!


வி.தர்மலிங்கம்


அ.அமிர்தலிங்கம்


1989இல்
போராளிகளோடு பேசிச்
சமாதானம்
பேண நினைத்தீர்கள்!
விடவில்லை!!


வெ.யோகேஸ்வரன்

1999இல்
கோரமாய்ச் சிதைந்த
மண்ணில்
மக்கள் வாழ்வைச்
செழுமைப்படுத்த
ஆர்வமாய்ப் பாடுபட்டீர்!
அதனையும்
விடவில்லை!!


சரோஜினி யோகேஸ்வரன்


பொன்.சிவபாலன்



பொன்.மதிமுகராசா

கடந்தகாலச் சம்பவங்களில் பாடம் படிக்க மறந்தோரால் - வழி நடத்தமுடியாது
என்பதை உணர்வீர்! சிந்திய குருதியினால் பாடம் புகட்டிய முந்திய தலைவர்களுக்கு

## எம் கண்ணீர் அஞ்சலிகள்!!

(94897)

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
## (ஈ.பி.டி.பி.)



# அரசாங்க அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 05.12.2001

மேற்படி தேர்தலில் இல. 10 - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தின் பிரகாரம் சிங்கள அகர வரிசையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களையும், இலக்கங்களையும் குறிப்பிட்டு வாக்காளர் அட்டையுடன் விநியோகிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் தொடர்பான தமிழ் அறிவித்தலில் (முதன்மை வேட்பாளர்) பெயர் இல. 3 அஹமட் சுல்தான் சுபியான் என்ற பெயர் தவறவிடப்பட்டுள்ளது என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு அமைய வேண்டும் எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
### மரம்

01. அப்துல் காதர் இக்பால்
02. அப்துல் ஹய் ஹசன் மொகிதீன்
03. அஹமட் சுல்தான் சுபியான்
04. ஞானசுந்தரம் ஆனந்தகுமார்
05. மொஹமட் அபூபக்கர் செயட் றிபாய்
06. மொஹமட் உசன் தம்பி அப்துல் கையூம்
07. மொஹமட் ராசா நல்சாட்
08. மொஹிதீன் அப்துல் காதர் ஜவீபர்
09. சாஹுல் ஹமீட் தைபூர்
10. சாஹுல் ஹமீட் முத்தலிப்
11. சுபயிர் மொஹமட் மனாப்தீன்
12. சுல்தான் அப்துல் காதர் முபீன்

க.சண்முகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இல.10 - யாழ்ப்பாணம் -
தேர்தல் மாவட்டம்.

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2001-11-28.

(C/19558)

## ஜே.வி.பி.உறுப்பினர் ஐவர் கைதாகினர்

கொழும்பு,டிசெ.2

சட்ட விரோதமான முறையில் வெடி மருந்துகளை வைத்திருந்த ஜே.வி.பி.உறுப்பினர்கள் ஐவர் நேற்று முன்தினம் வெலிகமவில் வைத்து பொலீஸாரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

'பவுடர்' புட்டி ஒன்றினுள் வெடி மருந்துகளை நிரப்பி வைத்திருந்த இவர்கள் அதனைத் தேர்தல் வன்முறைகளின் போது பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க-4)

## வேட்பாளரின் வாக்காளர் அட்டையும் அபகரிப்பு

வவுனியா,டிசெ.2

வவுனியாவில் 500 வாக்காளர் அட்டைகள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

கூட்டமைப்பின் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) வேட்பாளரான சிவசக்தி ஆனந்தன் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.

மாற்றுக் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களே வாக்காளர் அட்டைகளை அபகரித்தனர். எனது வாக்காளர் அட்டையும் எனது ஆதரவாளர்களின் வாக்காளர் அட்டைகளும் அவற்றில் இருந்தன என்று அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(க)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் ☆ 12 ☆ 09 ☆ 1925

மறைவு ☆ 05 ☆ 12 ☆ 1998

### திருமதி மரகதவல்லி கணபதிப்பிள்ளை

(காலஞ்சென்ற சட்டத்தரணி, சமாதான நீதிவானும், பிரசித்த நொத்தாரிசுமான - பொன் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி)

**திதி.02.12.2001**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்புடன் தங்களை
நினைவுகூரும் குடும்பத்தினர்.
*கரணவாய் வடக்கு,*
*உடுப்பிட்டி.*

*இல: 25 4/21, டாக்டர்*
*E.A.கூரே மாவத்தை,*
*கொழும்பு - 6.*

(95302)

# யுத்தத்திற்கு, வன்முறைக்கு எதிரான வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம்




பார்க்கும் திசைகளிலெல்லாம்
பதவி ஆசை
மோதிக் கொள்ளச் செய்கிறது.

நிறங்களை அடையாளப்படுத்திக்
கொண்டுள்ள மாமாக்களும் மாமிகளும்
கொலைக் களம் வரை மோதிக்
கொள்கின்றனர்.
யாருக்காக?
எங்களுக்காகவா?
ஜனனித்த நாள் தொடக்கம்
யுத்தத்தின் மத்தியில் எமது
வாழ்க்கை......

பிறந்த முதல் நாள். முதல் மூச்சு
விடும் போதே எங்கள் பிஞ்சு
உள்ளங்களில் துப்பாக்கி சூடு
விழுந்தது.

அன்றிலிருந்து நடுங்கி நடுங்கி
பயந்து வாழும் எங்கள் பிஞ்சு
உள்ளங்களை சுத்தமான சுவாச
மூச்சு விடவே அனுமதிக்க
மாட்டீர்களா?

பிஞ்சு மனசுகளில் வன்முறைகள்
இல்லை
உண்மையாக.....




BEAT

මහජන සාම පෙරමුණ
மக்கள் சமாதான முன்னணி
People's Peace Front

12/14 புராண விகாரை வீதி.
கொழும்பு 06.
தொலைபேசி: 01 -818344. 854127
பக்ஸ்: 01 -819064
E-mail:peace2@sri.lanka.net

(C/19520)

சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி
### பொன்னுத்துரை திருவருட்செல்வி

தோற்றம் 1945.10.24 — மறைவு 12.12.2000

**திதி: 02.12.2001 (ஞாயிற்றுக்கிழமை)**

ஆண்டு ஒன்று மறைந்ததம்மா - எங்கள்
குலவிளக்கு அணைந்த தம்மா!
வெள்ளி ஒன்று மறைந்த தம்மா - எங்கள்
குரலோசை தணிந்த தம்மா!
நீ மறைந்த தவிப்பினிலே நெஞ்சம் வாடுதம்மா!
நீ மறைந்த செய்தி கனவாகாதோ என்று
நெஞ்சம் தவிக்கு தம்மா!
நீ வருவாயென எம்மனம் வாசல் வழி
போகுதம்மா - ஆனால்
நீயோ என்றும் மீளாத்துயில் கொண்டாதேனம்மா!
செங்கமலப் பாதத் திறைவன் மடி மீதிருந்து
எமது துயர் தீர்ப்பாயே!
பாசத்தின் அருளே எங்கள் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கை யாக்குகின்றோம்
என்றும் அன்னை நாகபூஷணி அம்பாளின்
திருப்பாதக் கமலத்தின் கீழ் வீற்று இருப்பாயாக!

(95403)

திரு.பொ.ஸ்ரீபாலன் (மகன்)
(பலாலி ஆசிரியர் கலாசாலை,
முதலாம் வருடம்)
*ஸ்ரீ இரட்டங்காலி முருகன்*
*கோயிலடி, 2ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

பிரிவின் கொடுந்துயராற்றாத
கணவன், அன்புப் பிள்ளைகள்
மருமகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், உறவினர்கள்.

## பொதுத் தேர்தல் - 2001

# திக்கம் வடிசாலைக்கு என்ன நடந்தது?



**சபாநாயகர் அவர்களே!**

திக்கம் வடிசாலை பற்றி வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு சமர்ப்பித்துள்ள அறிக்கை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

அதாவது திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபைக்கோ அல்லது வடக்கு அபிவிருத்தி அமைச்சுக்கோ சொந்தமானதல்ல. தற்போது அதனை நிர்வகிக்கும் பொறுப்பையே இவர்கள் ஏற்றுள்ளனர்.

திக்கம் வடிசாலையின் வரலாறு எனக்கு நன்றாகத் தெரியும். காரணம் அதனை நிறுவிய முன்னோடிகளில் நானும் ஒருவன்.

1970களில் நிதி அமைச்சராகவிருந்த என்.எம். பெரேரா கள் இறக்கும் தொழிலை கூட்டுறவு முறைமூலம் நடைமுறைப்படுத்த உத்தரவு பிறப்பித்ததை அடுத்து கூட்டுறவு முறையிலான கள்ளுக்கடைகள் உருவாகின. சீவல் தொழிலாளர்களும் நன்மை அடைந்தனர். எனினும் சுயதேவைக்கும் அதிகமான கள் சேர்ந்து கொண்டதை அடுத்து மிகுதியை வீச வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இந்த வேளையிலேயே நானும், திரு. இராஜலிங்கம், திரு. துரைரத்தினம் ஆகிய மூன்று பேரும் மிகுதிக் கள்ளை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தவெனத் திட்டம் தீட்டினோம். இதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து நிதியுதவியும் கிடைத்தது.

எனவே மேற்படி நிதியைப் பயன்படுத்தி வடிசாலை ஒன்றை அமைக்கும் வகையில் திக்கத்தில் முன்னர் ஜேர்மன் அரசு நடத்திய சீனித் தொழிற்சாலையையும் நாங்கள் அதற்கெனப் பெற்றுக்கொடுத்தோம். இவ்வாறு உருவானதே திக்கம் வடிசாலை.

ஆனால் இன்று யார் யாரோ...? எல்லாம் அதற்கு உரிமை கொண்டாடுவதுடன், அது பற்றிய தவறான அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றனர். எனவே இந்த வடிசாலை என்றைக்கும் பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமாகிவிடாது.

பனை அபிவிருத்திச் சபை 08-01-2001 இல் மேற்படி வடிசாலையை சட்டத்திற்கு முரணான வகையிலேயே சுவீகரித்துக் கொண்டது. இதனால் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கிக் கணக்குகள் இயங்கவிடாமல் தடுக்கப்பட்டன. ஈ.பி.டி.பி. உறுப்பினர்களே இவற்றுக்கெல்லாம் காரணம் என்பதையும் தெரியப்படுத்தவேண்டிய அவசியம் எனக்குண்டு.

இந்த சுவீகரிப்பை உடனடியாகத் தடுத்துநிறுத்துமாறு வடிசாலையின் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்னிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தார். நானும் அது தொடர்பான கடிதங்களை ஜனாதிபதிக்கும் கூட்டுறவு அமைச்சருக்கும் அனுப்பியிருந்தேன்.

எனவே திக்கம் வடிசாலை உடனடியாக கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதனை நிர்வகிக்கும் ஆற்றலும், நிதியும், கூட்டுறவுச் சங்கத்திடம் உண்டு. 12 ஆயிரத்து 500 ஏழைச் சீவல் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் நடவடிக்கையை தயவுசெய்து எவரும் மேற்கொள்ளவேண்டாம்.

10-04-2001 அன்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் வீ.ஆனந்தசங்கரி ஆற்றிய உரை

★ சுவீகரிப்பாளர்களிடமிருந்து வடிசாலையை மீட்போம்...!

★ சதிகாரர்களை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போம்...!!

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

## வீ.ஆனந்தசங்கரியை

ஆதரிப்போம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

## வீ.ஆனந்தசங்கரி இல. 8


(C/1986)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001
யாழ்.மாவட்டம்

# முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் முபீன்

- இனவாத அரசுகளின் (தமிழர் - முஸ்லிம் என்ற) பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்க, உரிமைப்போரின் உந்துசக்தியான தமிழ், முஸ்லிம் உறவை வலுப்படுத்த......
- இனவாத அரசுகளின் கெடுபிடிகள், பயங்கரவாதத் தடைச் சட்டங்கள், அடக்குமுறைக்கு எதிராக ஒற்றுமையுடன் ஓங்கிக் குரல் கொடுக்க......
- இடப்பெயர்வின் அவலத்தை உணர்ந்த நாம், இடம்பெயர்ந்த நம் மக்களின் உரிமைக் குரலை அரசியல் பலத்துடன் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்க.....

## மானுடத்தின் பெயரால் - மனிதாபிமானத்தின் பெயரால் - குடும்பத்துக்கு ஒரு வாக்கையேனும் அளித்திடுவோம்.






இவ்விளம்பரம் இடம்பெயர்ந்து வாழும் வலி.வடக்கு குரும்பசிட்டி மக்களுக்காக கலைப்பேரரசு

**ஏ.ரீ.பொன்னுத்துரை**

அவர்களால் வெளியிடப்பெற்றது.

## முபீன்

(94895)





# பொதுவாழ்வில் என்னாலான பங்கு

I. **"தமிழ்த் தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு"** என ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய முதலாவது தொழிற்சங்கமான இலங்கை ஆசிரியர் சங்கத்தில் 34 ஆண்டுகள் இணைந்து பணியாற்ற வாய்ப்புக் கிட்டியது. இச்சங்கத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே அநேக உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

II. 1980 யூலையில் நடந்த தொழிலாளரின் பொதுவேலை நிறுத்தத்தில் வடபகுதி ஆசிரியர் சங்கத் தலைமை ஏற்று எமது வலுவை அரசிற்கு உணர்த்தினோம். வரலாற்றில் முதல் தடவையாக வடபகுதி ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது

III. தேசியப் பிரச்சினையை சிங்கள மக்களும், உலகமும் அறியும் நோக்கில் தமிழ் மக்களால் வெளியிடப்பட்ட முதலாவது ஆங்கில வார ஏடான 'Saturday Review' வில் ஆரம்பகாலம் முதல் கடமையாற்றினேன்.

IV. ('MIRJE') Movement for Inter Racial Justice and Equality இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான அமைப்பில் வடபிராந்திய நிர்வாகசபை உறுப்பினராக, வடமாகாண ஆசிரியர் (N.P.T.A.) சங்கத் தலைவர் என்ற பதவிவழி மூலம் செயல்பட்டு வந்தேன்.

V. 1980ஆம் ஆண்டுகாலப் பகுதியிலும், அண்மைக்காலத்திலும் வடபிராந்திய தொழிற்சங்கக் கூட்டுக்குழுவில் இணைத்து, தொழிலாளர் மேம்பாட்டிற்கு உதவினேன்.

VI. ஒரு சுற்றுநிருபத்தை, ஆசிரியர் உள்வாங்கலின்போது ஆசிரியர்கட்கு பாதகமாக செயல்படுத்திய வடக்கு கிழக்கு மாகாண சபை கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து (இல.HR/C/1132) எனக்கு சாதகமான விதப்புரையை பெற்றிருந்தபோதும் N.E.P.C. கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் பதவிமோக அரசவிசுவாச போக்கினால் அவர் தியாகராஜாவுக்கு இச்சம்பளத்தை வழங்கினால் இலங்கையில் பல ஆசிரியர்களுக்கு பல லட்சம் ரூபாவை கொடுக்க நேரிடும் என கல்வி அமைச்சருக்கு அறிவித்துவிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு விதப்புரை செய்தவண்ணம் எனக்கு தருமதியான சம்பள நிலுவையை தராது விட்டார். அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து (No. 393/2000) நீதியை நிலைநாட்டியதுடன் ஆசிரியர்கட்கு வழங்கவேண்டிய சம்பளத்தை வழங்கும்படியான தீர்ப்பைப் பெற்றேன். இத்தீர்ப்பின் மூலம் என்போன்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலன் அடைந்துள்ளார்கள்.

VII. Ragging என்ற பெயரில் நடக்கும் படுபாதக செயலுக்கெதிராக 1995இல் பத்திரிகையில் மிகவும் காரசாரமான வார்த்தைகளில் எழுதினேன். 1999ல் வரப்பிரகாஷ் என்ற மாணவன் கொலையுண்டதும், இந்த ஈனச்செயலுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரில் ஒரு பகுதியினரின் அனுசரணை இருப்பதால் இதைக் குற்றச் செயல் என அரசு சட்டமாக்க வேண்டும் என பத்திரிகையில் எழுதியிருந்தேன். எனது கருத்தேடு ஒட்டிய கருத்தினையே பல கல்விமான்களும் முன் வைத்தனர். இதன்பின்னர் அச்செயலை அரசு குற்றச் செயல் என எனச் சட்டமாக்கியது. Ragging க்கு எதிராக செயல்படும் மாணவர்களை ஒருசில விரிவுரையாளர்கள் பரீட்சையின்போது 'அறுவைச்சிகிச்சைக்கு' உட்படுத்தியதும் உட்படுத்திக்கொண்டிருப்பதும் கண்கூடு.

VIII. எனது பெரு மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய I Francis Xavier (Barrister & Solicitor) உடன் இணைந்து 1983இல மனித உரிமை இல்லம் (Home for Human. Rights) நிறுவி, மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி சர்வதேச மன்னிப்புச் சபைக்கு (Amnesty for International) வெளிப்படுத்தினோம்.

IX. கல்லூரிகளில் ஆசிரியர்களாகவும், அரச அலுவலகங்களில் ஊழியர்களாகவும் பணியாற்றிக் கொண்டு உயர்கல்வி பெறுவதற்கான அனுமதி பெறாமல், பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று, உதவிப் பணமும் சம்பளமும் பெற்று, ஒன்று இரண்டு புள்ளிகள் குறைந்த மாணவர்களின் வேலைவாய்ப்பையும், கல்வி வாய்ப்பையும் பாழாக்கியவர்களை உரிய இடத்திற்கு எடுத்தியம்பியதன் மூலம், ஒன்று, இரண்டு குறைந்த மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வழிசமைக்கப்பட்டது.

(சுற்றுநிருப இலக்கம் 04/2000)

**இவ்வாறு எனது ஆற்றலுக்கும் சக்திக்கும் ஏற்ப மனச்சாட்சி வழி நின்று பொதுச்சேவை செய்து வந்துள்ளேன். அதன் அடிப்படையில எதிர்வரும் பொதுத் தேர்தலில் புதிய - ஜனநாயக கட்சி - ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சின்னமான மணிக்கூட்டுச் சின்னத்தில் வேட்பாளராக நிற்கின்றேன். எனது இலக்கம் 9 ஆகும். உங்கள் முடிவை நீங்களே தீர்மானித்து வாக்களிப்பீர்கள் என நம்புகிறேன்.**

நன்றி.

சங்கானை. (94894) முத்தையா தியாகராசா.


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்

**யோகலிங்கம் கமல்ஸ்ரன்**

அவர்களின்

பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

'YAMAHA'

*யாழ்ப்பாணம்.* (95465) விளையாட்டுக் கழகத்தினர்.

## நன்றியுணர்வுடன் வாழ்த்துகின்றோம்

சென். ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அன்பான வேண்டுகோளுக்கிசைந்து அம்மன் வீதி, சென். ஜேம்ஸ் வீதி, இந்துக் கல்லூரி வீதி ஆகிய வீதிகளுக்கு மின்சார இணைப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து ஐந்துலட்ச ரூபாவில் முதற்கட்டமாக இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கான காசோலையை எமக்குத் தந்துதவி, அந்த வீதிகளில் மின் ஒளியானது சுடர் விட்டுப் பிரகாசிக்க உதவிய பெருந்தகைகளான



மேதகு கொடைவள்ளல் மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் -



வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வலிமேற்கு பிரதேசசபைத் தலைவருமாகிய

உயர்திரு.

**ந. திரிலோகநாதன்**

அவர்களையும் -

*நன்றியுணர்வுடன் வாழ்த்துக்கூறி மகிழ்கின்றோம்.*

பண்டத்தரிப்பு அம்மன் வீதி, சென்.ஜேம்ஸ் வீதி, இந்துக்கல்லூரி வீதி,

பண்டத்தரிப்பு. (95458) வாழ்மக்கள்.

## நன்றியும் பாராட்டும் என்றும் உங்களுக்கே

**தவத்திரு தனிநாயகம் அடிகள் தமிழ்மன்றம் - நெடுந்தீவு**

எமது மன்றத்தினால் முன்னெடுக்கப்படவிருக்கும் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை, சிலை அமைப்பு, நூல் வெளியீடு ஆகிய திட்டங்களுக்கென 2 லட்சம் ரூபாவை தந்துதவியமைக்காக -



கௌரவ அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் -



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

**கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)

அவர்களையும் -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான

**எஸ்.சிவதாசன், எஸ்.தவராஜா** அவர்களையும் -

நல்லூர் பிரதேச சபைத் தலைவர்

**க.மணிபல்லவராஜன்** (நிசாந்தன்) மற்றும்

ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளர்

**ந.மதனராசா** (மனோ) அவர்களையும் -

ஈ.பி.டி.பி. நெடுந்தீவு பொறுப்பாளர்

**க.நவநீதன்** (மோகன்) அவர்களையும் -

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சைச் சேர்ந்த தோழர்

**ரமணன்**, தோழர் **கிருபன்** ஆகியோரையும்

*மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

தனிநாயகம் அடிகள் தமிழ்மன்றம்.

*நெடுந்தீவு.* (C/19590)

# நிரந்தர சமாதானத்துக்கு எதிரான சக்திகளைத் தேர்தலில் நிராகரியுங்கள்!

## பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

**யாழ். பல்கலைக் கழகமாணவர் ஒன்றியம் விடுத்தஅறிக்கை இங்கு முழுமையாகப் பிரசுரமாகின்றது.**

சிங்களப்பேரினவாதஅரசுகளால் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்தப்பட்ட தேர்தல்களை எல்லாம் தமிழ் மக்கள் நிராகரித்து வந்ததனை ஏற்கனவே தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இன்று அதே தேர்தல் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தினைப் பலப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. சந்திரிகா அரசு புலிகளை பயங்கரவாதிகள் என சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்து தனிமைப்படுத்தி, போராட்டத்தை பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்கி அழிப்பதே நோக்கமாகும். அரசின் இத்தகைய சர்வதேச பிரசாரத்திற்கு ஆதரவாக ஈ. பி. டி. பி. அமைப்பினரையே பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் உலகின் பலநாடுகளும் புலிகளைத் தடைசெய்துள்ளன. இதனால் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையிலேயே தேர்தல் வந்துள்ளது. தேர்தல் முடிவுகள்தான் சமாதானமா? போரா? என்பதனைத் தீர்மானிக்கப் போகின்றன. நிரந்தர சமாதானத்திற்கு எதிரான — ஈ.பி.டி.பி. உட்பட்ட ஆயுதக் குழுக்களை — இத்தேர்தலில் நிராகரிப்பதுடன் தனித்தனியாகப் போட்டியிடும் சிறு கட்சிகளுக்கு வாக்களிக்காது வாக்குகள் சிதறுண்டு போவதனைத்; தவிர்ப்பதன் மூலமும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் நிரந்தர சமாதானத்திற்கு ஆதரவான —

★ புலிகள் மீதான தடை நீக்கம் —

★ பொருளாதாரத் தடை நீக்கம் —

★ மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் மட்டும் பேசுதல் —

என்பதை வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு நாம் அனைவரும் வாக்களிப்போம். இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டம் ஒரு பயங்கரவாதம் அல்ல என்பதனையும், அப்போராட்டம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என்பதனையும் ஒரே குரலில் ஒற்றுமையாக வெளிப்படுத்த முடியும்.

அத்துடன் மக்களின் விருப்பம் போர் அல்ல, நிரந்தரசமாதானம் என்பதனையும் வெளிப்படுத்தமுடியும்.

அத்துடன் நிரந்தர சமாதானத்திற்கு எதிராக செயற்பட்டுக் கொண்டு — அவசர காலச் சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் என்பவற்றிற்கு ஆதரவளித்து — குடாநாடு உட்பட வடக்கு — கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்கள் மீதான அடக்குமுறைகளை மேற்கொள்ள துணைபோவதுடன் தீவுப் பகுதியில் புதன்கிழமை அப்பாவி மக்கள் மீது காடைத்தனம் புரிந்து படுகொலை செய்த தமிழ் ஆயுதக்குழு உட்பட்ட சகல ஆயுதக் கும்பல்களையும் மண்ணில் இருந்து அகற்ற முடியும்.

எனவே மக்கள் சிறு சலுகைகளைக் கண்டு ஏமாந்து போகக்கூடாது. இம்முறை ஈ. பி. டி. பி. அமைப்பு உட்பட்ட ஆயுதக்குழுக்களோ, தனித்தனிப் போட்டியிடும் சிறு கட்சிகளோ ஓர் ஆசனத்தைக்கூட பெறமுடியாது என்பது தெளிவாகி விட்டது.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டால்.

★ எங்கள் மண்ணில் இருந்து சிறீலங்கா இராணுவம் வெளியேறிவிடும்.

★ ஈ. பி. டி. பி உட்பட்ட சகல ஆயுதக்குழுக்களும் ஓடிவிடும்—

★ ஆயுதக் கலாசாரம் ஒழிந்து விடும்—

★ காவலரண்கள், சோதனைச்சாவடிகள் என்பன இருக்காது—

★ பாஸ் நடைமுறை, விசேட அடையாள அட்டை நடைமுறை, குடும்பப்பதிவு, அகதிவாழ்க்கை என்பனவற்றிற்கு முடிவு வந்துவிடும்.

★ கடல்வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டுவிடும். கடலுக்கு விரும்பியநேரம், விரும்பிய தூரம் சென்று விரும்பிய அளவு மீன் பிடித்து நிம்மதியாக வாழலாம்—

★ காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி உட்பட்ட சகல இடங்களுக்கும் மக்கள் மீளக் குடியமர முடியும்—

★ சிறையில் வாடும் சகல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் விடுதலை பெறுவர்—

எனவே அனைவரும் ஒற்றுமையாக ஒரே கருத்தை வெளிப்படுத்த தேர்தலை பயன்படுத்துவோம். (ஐ)

## கிரனேட்டைக் காட்டி மிரட்டிய இளைஞர் பொலீஸிடம் சிக்கினர்

கைக்குண்டைக் காட்டி மிரட்டி பணம் பறிக்க முயற்சித்த இருவர் பொலீஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள வீடியோ படப்பிடிப்பு நிலைய உரிமையாளரின் வீட்டுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் சென்ற இரு இளைஞர்கள் கைக்குண்டை காட்டி மிரட்டி அவரைக் கடத்திச் செல்ல முயன்றதாகவும்—

தப்பிச் சென்ற அவர் வீதிக் காவலுக்கு நின்ற பொலீஸாரிடம் முறையிட்டதையடுத்து இளைஞர்கள் இருவரும் பொலீஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டதாகவும் — கூறப்படுகிறது.

அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்ட இந்த இளைஞர்கள் இருவரும், சம்பந்தப்பட்டவரின் வீட்டுக்குச் சென்று பணம் கேட்டு மிரட்டியதாகவும்—

அவர் பணம் தருவதாகக் கூறிய சம்பவதினத்தில் பணத்தைக் கொடுக்காததால், அவரைக் கடத்த இளைஞர்கள் முயற்சித்ததாகவும்—தெரிவிக்கப்பட்டது. (ஓ-11-86-180)

## நாரந்தனைச் சம்பவத்தை அடுத்து

# டக்ளஸின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகி விட்டது!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

ஊர்காவற்றுறைக்குத் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற எம்மை அங்கு வைத்துப் பயமுறுத்தவே டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டிருந்தார், ஆனால் அவரின் ஏவலாளர்கள் எங்களைப் பயமுறுத்துவதற்குப் பதிலாக தாக்குதல் நடத்தி இருவரைப் படுகொலை செய்ததுடன் பலரைப் படுகாயமடையச் செய்து விட்டனர்.

இதன் மூலம் டக்ளஸின் அரசியல் இருப்புக் கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு தெரிவித்துள்ளார். ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் சுரேஷ் அணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீது நாரந்தனைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இத் தாக்குதல் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்களுக்கு மிக மோசமான பொய்யான கருத்துக்களைக் கூறியுள்ளார் என்பதுடன் அவை பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் கருதுகின்றேன்.

தீவில் நடத்தப்பட்ட தாக்குதல் என்பது மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதை அதனைப் பார்த்தோர் புரிந்து கொள்ளலாம். துப்பாக்கிகளுடன் ஒரு குழுவும், அலவாங்கு, இரும்புக்கம்பி, செயின், தடிகள், வாள், கத்தி என்பவற்றுடன் இன்னொரு குழுவுமாகக் களத்தில் இறக்கப்பட்டே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. நிலைமை இவ்வாறிருக்க சுரேஷ் அணியினர் பொலீசின் ஆயுதத்தைப் பறித்து எம்மை நாமே சுட்டுக்கொண்டோம் என்பது தலையில் மூளையிருப்போர் கதைக்கும் கதையாகத் தெரியவில்லை. எம்மைப் பொறுத்தவரையில் அமைதியான பிரசாரத்திற்காக நாம் சென்றோமே தவிர, ஈ. பி. டி. பியினருடன் சண்டையிட நாம் அங்கு செல்லவில்லை.

டக்ளஸ் தேவானந்தா எம்மைப் பயமுறுத்துவதற்கே திட்டம் தீட்டியிருந்தாலும், அவரது காடையர் கூட்டத்தின் மோட்டுத்தனத்தால் இருவர் உயிரிழக்க 18 பேர் காயமடைந்ததானது இன்று அவரது அரசியல் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எம்மை மிரட்டுவதன் மூலம் வருகின்ற 5 ஆம் திகதி நாம் தேர்தல் கடமைக்கான தேர்தல் முகவர்களை அனுப்பமாட்டோம். அதன் மூலம் கடந்த காலங்களைப் போல் தான் விரும்பியவாறு கள்ள வாக்குகளைப் போட்டு பெட்டியை நிரப்பலாம் என்பதே அவரது சிந்தனையாக இருந்திருக்கும். ஆனால் டக்ளஸின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு நிச்சயமாக வருகின்ற 5 ஆம் திகதி தீவக மக்கள் உட்பட யாழ் குடாநாட்டு மக்கள் அனைவரும் நல்லதொரு பாடம் கற்பிப்பார்கள்.

தான் நடத்திய தாக்குதலைத் தானே கண்டிப்பதும், உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் காடைத்தனத்துக்குக் கண்டனம் தெரிவிப்பதும், தமிழர்கூட்டமைப்பும், பல்கலைக்கழக மாணவர்களும் நடத்திய கடையடைப்புப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதும், டக்ளஸின் குழம்பிய நிலையைமாத்திரமல்ல அவரது அரசியல் வங்குரோத்துத் தனத்தையும் துலாம்பரமாகப் பறைசாற்றி நிற்கின்றது.

இச் சமயத்தில் தீவக மக்கள்ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சகல காட்டுமிராண்டித் தனங்களையும் செய்து விட்டுத் தீவக மக்கள் தான் தாக்கினார்கள், தங்களுக்கும், அதற்கும் சம்பந்தமில்லையென தொடர்ச்சியாக அறிக்கைவிட்டு வருகின்றார்கள். இதன்மூலம் தீவக மக்கள் அனைவருமே காடையர்கள் என்ற முத்திரையை பதிக்க முயற்சிக்கின்றார். பி.பி.சி. வானொலியிலும், ஊடகங்களுக்கு கொடுக்கும் அறிக்கையிலும் இதனையே இவர் மீண்டும் மீண்டும் செய்கின்றார். எனவே டிசெம்பர் 5 ஆம் திகதியுடன் முடிவடையப் போகும் இவரது ஆயுத அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல், ஈ. பி. டி. பியின் காடைத்தனத்தை வெட்ட வெளிச்சமாக்க முன்வாருங்கள் நீங்கள் கிளர்ந்தெழுந்தால் இவர்கள் உங்களை நெருங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து செல்வராசா

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியைத் தமது வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்வராசா அவர்கள் நேற்று முன்தினம் (30-11-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், நேசமலர் அவர்களின் அருமைக் கணவரும், சிவரத்தினம் (சுவிஸ்), ரவீந்திரன் (நோர்வே), வசந்தன் (ஆசிரியர், அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அருள்நிதி, மாலினி, ஜெகப்பிரதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, இராசையா மற்றும் நாகம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கம்பையா, சிவபாக்கியம், புஸ்பராணி, கிருஷ்ணர் ஆகியோரின் மைத்துனரும், அஜீதன், சஜீதன், அட்சயா, சுபாஷினி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-12-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி முழக்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. வசந்தன்
(ஆசிரியர்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (95457)

## திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம்

(மணி ரீச்சர்)

(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை)

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம் (27-11-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசையா இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம், கிருஷ்ணானந்தன், கிருஷ்ணபாலன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணிவண்ணன் (நோர்வே), யாழினி (கனடா), புகழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிமா (நோர்வே), தயாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-12-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மணிவண்ணன்,
புகழினி (அம்மு), பிள்ளைகள்.

நந்தாவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (95472)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஈவினையைச் சேர்ந்த
யாழ்.மத்திய கல்லூரி மாணவன்
**அருட்செல்வம் ரமேஸ்**
2001ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3A பெற்றதையிட்டு அவரையும், அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர், தனியார் கல்வி நிறுவனத்தாரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாமா குடும்பம்
*ஈவினை.* நகுலேஸ்வரன், செல்வதேவி, பமிலா.
(95470)



## உள்ளம் கனிந்த நன்றியுணர்வோடு
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு மேற்கு உயரப்புலம்
**அருள்மிகு ஐயனார் ஆலயம்**

பழம்பெருமை வாய்ந்த ஐயனார் ஆலய திருப்பணி வேலைகளுக்காக ரூபா மூன்று லட்சம் ஒதுக்கீடு செய்து அதில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை உடன் வழங்கி உதவியமைக்காக,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரத்துறை,
இந்து கலாசார அமைச்சரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்
நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
பிரதம அமைப்பாளருமாகிய
**உயர்திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
தீவுப் பகுதி அமைப்பாளருமான
**உயர்திரு. என்.மதனராஜா (மனோ)**
அவர்களையும்



ஈ.பீ.டி.பியின் நெடுந்தீவு அமைப்பாளராகிய
**உயர்திரு. கே.நவநீதன் (மோகன்)**
அவர்களையும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு. புலவர்
**A.W. அரியநாயகம்** (J.P.U.M.) அவர்களையும்

எல்லாம் வல்ல ஐயப்ப சுவாமியின் அருள் பெற்று மேன்மேலும் மக்கள் சேவை புரிந்திட வேண்டுமென நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

- ஆலய திருப்பணிச் சபையினர்.
நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.
(95480)



# நினைவகலா ஓராண்டின் நிறைவினிலே

முகிழ்ப்பு
25
.
05
.
1935



உதிர்வு
12
.
12
.
2000

**அமரர் T.குணசிங்கம்** (B.Sc.)
(முன்னாள் ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
**திதி : 02.12.2001**

சாந்தி பெற வென்றும்
இமையத்துறை கின்ற பரன்
தாள் பணிகின்றோம்
இமைப் பொழுதும் உமை
மறவோம் எங்கள் அப்பாவே

*18/1, அலோ சாலை,*
*கொள்ளுப்பிட்டி,*
*T.P. 01-301998*
(95477)
- குடும்பத்தினர்.


## மிதிவெடியில் குடும்பஸ்தர் கால் இழப்பு!

மாடு மேய்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கித் தனது வலது காலை இழந்தார்.

இச்சம்பவம், நேற்று நண்பகல் 1.30 மணியளவில், வல்லிபுரக் கோயிலடியில் இடம்பெற்றது.

புலோலி தெற்கு வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த கணபதி கிட்டினன் (வயது 57) என்பவரே காலை இழந்துள்ளார்.

மந்திகை மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஜ-109)

## வல்லையில் சோதனை

வடமராட்சி,டிசெ.2

வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பயணிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன வல்லை சோதனைச்சாவடியில் வைத்து நேற்று பதிவு செய்யப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, தனியார் மினிபஸ் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றில் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றோரின் பெயர் விவரங்களே இவ்வாறு பதிவு செய்யப்பட்டன.

இங்கு மேற்கொள்ளப்பட்ட வழமையான சோதனை நடவடிக்கையின்போது பயணிகள் எங்கு செல்கிறார்கள் என விசாரிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் வருவோர்கள் அனைவரும் இறக்கப்பட்டு அவர்களில் 40 வயதுக்குட்பட்டோரின் பெயர், அடையாள அட்டை விவரம் பதிவு செய்யப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

(ஜ-173)

## சகஸ்ர கலச சங்காபிஷேகம்

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை சகஸ்ர கலச சகித சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

1008 கலசங்களால் அபிஷேகம் நடத்தப்படும். இதற்காக விசேடயாக குண்டங்கள் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9.30மணிக்கு மகா அபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து சகஸ்ட கலச சகித சங்காபிஷேகம் இடம்பெறும்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் இந்த ஆலயத்திலேயே இவ்வாறான அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஜ-7)


# திருமறைக் கலாமன்ற தினம்

# CPA DAY

காலம்:
**03.12.2001** திங்கட்கிழமை (நாளை)
நேரம்:
மாலை 6.30 மணி

இடம்:
திருமறைக் கலாமன்ற அரங்கு

**அரங்கை அலங்கரிக்கும் நிகழ்வுகள்**

☆ "உன்னை நினைத்தேன் தாயே" ஒலிப்பதிவு நாடா அறிமுகம்
☆ மூத்த கலைஞர் கௌரவிப்பு
☆ நாடகப் பயிலக மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல்
☆ நடனங்கள்
☆ சிறப்பு நிகழ்ச்சி:

**ஏகலைவன்**
(நாட்டுக்கூத்து)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. : 2393
திருமறைக் கலாமன்றம்

பிரவேசம் இலவசம்
(C/19595)



# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கோப்பாய் தெற்கு மாந்தோப்பு திருவருள்மிகு மாரியம்மன் ஆலயம்**
மேற்படி ஆலயப் புனரமைப்புக்கென நிதியுதவி
வழங்கியவர்களான



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



கோப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர்
**திரு. பூ.குணசிங்கம்** (J.P.U.M.)



அவர்களையும் -
கோப்பாய்ப் பிரதேச சபையின்
உப தலைவர்
**திரு. U.L.A.ரவி** அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் தெற்கு மாந்தோப்பு
திருவருள்மிகு மாரியம்மன்
ஆலய பரிபாலன சபையினர்.
(95476)



# மனப்பூர்வமான நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

"ஊருணி நீர்நிறைந் தற்கே உலகவாம்
பேரறி வாளன் திரு"

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற அங்கத்தவர்களுக்கு வியாபாரப் புனரமைப்பு நிதியாக 2 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து அதில் 1 கோடி ரூபாவை வழங்கி எமது அங்கத்தவர்களின் வாழ்க்கையை வளப்படுத்த உதவியவர்களான



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்
**மாண்புமிகு K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
**உயர்திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**உயர்திரு. தவராசா**
அவர்களையும்



தென்மராட்சி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
**உயர்திரு. சாள்ஸ் அலெக்சாண்டர்**
அவர்களையும்

எமது மனப்பூர்வமான நன்றியுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது"

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,**
சாவகச்சேரி.
(95473)



தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

மதிப்புக்குரிய தீவகம் வாழ் மக்களுக்கும், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வாழ் மக்களுக்கும் ஓர் அன்பு வேண்டுகோள்!

உங்கள் இனப்பற்றுதலையும், தமிழ்ப் பற்றுதலையும், விடுதலைப் பற்றுதலையும் நாங்கள் நன்கு அறிவோம்.

உங்களுக்காகத் தன் இரத்தத்தைச் சிந்தித் தன் இன்னுயிரையே தியாகம் செய்த தியாக மாமனிதரின் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிருகிறோம்.

உங்கள் வீடுகளுக்கு வரவும், நேரில் சந்தித்து உரையாடவும் எங்களுக்கு வாக்களிக்கும்படி கேட்கவும் பெரிதும் விரும்புகின்றோம்.

இயலுமானவரை வாக்காளர்களாகிய உங்களைச் சந்தித்து வருகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும் எல்லோரையும் சந்திக்க இயலாது என்பதைத் தற்போது உணர்கின்றோம்.

உங்களில் பலர் இடம்பெயர்ந்து இருப்பதாலும், ஒரு பரந்த பிரதேசத்தில் இத்தேர்தல் நடைபெறுவதாலும், கால அவகாசம் போதாது இருப்பதாலும் அனைவரையும் சந்திப்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். எங்கள் இயலாமைக்கு வருந்துகின்றோம். அத்துடன் தேர்தல் அடாவடித்தனங்கள், உயிர்ப்பலிகள் எடுக்குமளவிற்கு உயர்ந்திருக்கின்றன. ஒரு பயங்கர நிலை நமது மண்ணிலும் உருவாகிக்கொண்டிருக்கின்றது. இதை உணர்ந்துகொள்ளுங்கள். தயவு செய்து எங்களுக்கு வாக்களிக்கும்படி உங்கள் ஒவ்வொருவரையும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

வாக்களிப்பது உங்கள் உரிமை. இந்த உரிமையைப் பாதுகாப்பதும் பயன்படுத்துவதும் உங்கள் பொறுப்பு. வாக்களிக்குமுன் ஒருகணம் சிந்தியுங்கள். இந்தக் கணம்தான் உங்கள் எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கப்போகின்றது. உங்கள் ஊரவர், உறவினர், நண்பர் என்பதற்காக வாக்களிக்காமல், சலுகைகளுக்காக, பட்டம், பதவிகளுக்காக வாக்களிக்காமல், உங்கள் இனத்தின் வருங் காலத்தை எண்ணிப்பார்த்து வாக்களியுங்கள்.

அடாவடித்தனங்களை, அச்சுறுத்தல்களை நீங்கள் எவ்வளவு தூரம் வெறுக்கின்றீர்கள் என்பதை உங்கள் தீர்ப்பு வெளிப்படுத் தட்டும்.

அமைதியான வாழ்க்கையை, சுதந்திரமான வாழ்க்கையை, பொருளாதார சுபீட்சம் நிறைந்த வாழ்க்கையைத்தான் நீங்கள் விரும்புவதாயின் நல்லதோர் தீர்ப்புத் தாருங்கள்.

எனவே வன்முறையை வளர்க்காத, அதில் ஈடுபடாத, அமைதி வழியில் - அறவழியில் - உழைக்கும், தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களாகிய எங்களை ஆதரியுங்கள்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி இல. 1

திரு.சீ.வி.கந்தையா சிவஞானம் இல. 5

திரு.கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் இல. 8

என்றும் மறவாதீர்கள் வெற்றி இலக்கங்கள் முன்றையும்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

இது தியாகிகள் வாழும் திருப்பூமி என்பதை இனப் பகைவர்கள் உணரும்படி செய்வோம்

இங்ஙனம்
அ.விநாயகமூர்த்தி,
சீ.வி.கே.சிவஞானம்,
ஜீ.ஜீ.பொன்னம்பலம்.

(94878)


# கண்ணீர்க் காணிக்கை

எமது சக மாணவன்
**ஜனார்த்தனனின்**
பாசமிகு தந்தையார்

## அமரர் கந்தையா பன்னிருகரம்

அவர்கள் 30.11.2001 அன்று இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத் துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

*மாணவர்கள்,*
*முகாமைத்துவ நிதிப்பீடம்,*
*கொழும்புப் பல்கலைக்கழகம்.*

(C/19605)

# கண்ணீர் அஞ்சலி



## சபாபதி வரதராசா

(ஒப்பிலாமணி மாமா)

(முன்னாள் உரிமையாளர், கிருஸ்ணா நகை மாளிகை, கன்னாதிட்டி)

அன்னாரின் திடீர் மறைவினால் ஆறாத சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் - ஊழியர்களும்

அருள்முருகன் நகை அகம்
*93/1,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சாரங்கன் நகை அகம்
அன் சென்ரர்
*45,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சாரங்கா நகைமாடம்
*177/4 கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.*

(C/19601)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 30 - 11 - 1944



இறப்பு 30 - 11 - 2001

எமது ஸ்தாபனத்தின் நெருங்கிய நண்பரும்
பிரபல நகை வியாபாரியுமாகிய

## சபாபதி வரதராசா (ஒப்பிலாமணி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது ஸ்தாபனத்தின் சார்பாக அவருக்கு கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

*213,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(95464)

லலிதா ஜுவலறி
ஸ்தாபனத்தார்.




சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழினம் தன்னைத் தானே ஆள - களம் பல கண்ட - சிங்களச் சிறையில் சித்திரவதைப்பட்ட தமிழினத்தின் விடிவுக்கு தியாகங்கள் பல புரிந்த தமிழ் மகன்

## மாவை சோ.சேனாதிராசா அவர்களே

எங்கள் தெரிவு இல. 12

(95501)

## தமிழர் விடுதலைக் கூட்டணி

12

### கைது செய்யப்பட்ட

# மதனராஜா, நெப்போலியனுக்கு நிபந்தனையுடனேயே பிணை!

யாழ்ப்பாணம்,டிசெ.2

பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் இரவு ஆஜர் செய்யப்பட்ட ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என்.மதனராஜா, ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் நெப்போலியன் ஆகியோர் சாட்சிகளை மிரட்டிக் குழப்பக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு இது தொடர்பாக நீதிவான் இ.த.விக்னராஜா விடுத்த உத்தரவின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

நெப்போலியன், என்.மதனராஜா ஆகிய இருவர் குறித்தும் தமக்குக் கிடைத்த சாட்சியங்களின்படி அவர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருக்கவில்லை என பொலீஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் இந்தச் சம்பவத்தில் காயப்பட்டவர்கள், இந்த இருவரும் அங்கு இருந்ததாக சாட்சியமளித்துள்ளனர்.

இரு தரப்புச் சாட்சியங்களும் முரண்படுகின்றன. சுதந்திரமான - நடுநிலையான - சாட்சியம் பெறப்படவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நீதிமன்ற உத்தரவுப்படி இவர்கள் இருவரையும் கைது செய்து வாக்குமூலம் பதிந்தபோது தாம் சம்பவ இடத்தில் இருக்கவில்லை என்று அவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர் - என்று பொலீஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணை பூரணமாக முடிவடையாதபடியால் இந்த இருவரையும் எதிர்வரும் மூன்றாம் திகதிவரை ஐம்பதாயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கிறேன்.

இவ்வழக்கில் சாட்சிகளுக்கு அச்சுறுத்தலோ, பயமுறுத்தலோ செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் பிணை ரத்துச் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையும் உத்தரவாக விடுக்கப்படுகின்றது.

மூன்றாவது சந்தேக நபரான ஜீவனே சம்பவத்தில் இறந்த இருவருக்கும் காயம் விளைவித்தார் என்பதற்குக் கண்கண்ட சாட்சியம் இருப்பதால் அவரை விளக்கமறியலில் வைத்து எதிர்வரும் மூன்றாம் திகதி அடையாள அணிவகுப்பு நடத்துமாறு உத்தரவிடுகின்றேன்.

சட்டவிரோதமான முறையில் வைத்திருக்கப்படும் ஆயுதங்களைக் களைதல் -

இலக்கமின்றி ஓடித்திரியும் வாகனங்களைக் கைப்பற்றுதல் -

ஆகியவை தொடர்பாக ஏற்கனவே விடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி உத்தரவிடுகிறேன். (உ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ரெலோ முதல்வர் செல்வம் அடைக்கலநாதனின் வாகனம் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பேரணி திருக்கோயிலில் இருந்து புறப்பட்டு அப்பகுதியின் கூட்டமைப்பு வேட்பாளர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் தம்பிலுவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது விநாயகபுரத்தில் வைத்து, வாகனத்தில் வந்த சிலர் பேரணியை நோக்கி கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்

ஈ.பி.டி.பியினரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்ததாகக் கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனினும் ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு பிரிவு அதனை மறுத்துள்ளது. (ம)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்த விசேட பந்தலில் அவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு அஞ்சலியுரைகள் ஆரம்பமாகின. பல்கலைகழகத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, யாழ்.மாநகரசபை முதல்வர் ந.ரவிராஜ், கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஐ.தே.கவின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அஞ்சலி உரைகள் முடிவடைந்ததும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் அவரின் பூதவுடல் தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் பல்கலைக்கழகத்தில் இருந்து அவரது பூதவுடல் பலாலி வீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி வழியாக தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

இந்த இறுதி ஊர்வலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன மற்றும் அவரின் ஆதரவாளர்கள், பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கூட்டணி அலுவலகத்தில் 12.45 மணிக்கு அஞ்சலி உரைகள் ஆரம்பமாகின. சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின் பின்னர் 2 மணிக்கு மீண்டும் பூதவுடல் பிரதம தபாலக வீதி, ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ்.வீதி ஊடாக கோம்பையன மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த ஊர்வலத்துக்குப் பொலீஸார் பூரண பாதுகாப்பு வழங்கினர். வீதிகள் தோறும் பொலீஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.(ம-10-180-ரி)

## பேரெழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

மண்டபத்தின் சகல விளக்குகளும் அணைக்கப்பட்டு இருள் கவ்வியிருக்க ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. அச்சமயம் தியாக கீதம் இசைக்க, அங்கு குழுமியிருந்த மக்களும் தங்கள் கைகளில் தீபச்சுடர் ஏற்றி, வருங்கால ஈழத் தமிழ் சந்ததிக்காகத் தம்மை அர்ப்பணித்த இனிய - இளைய - உறவுகளுக்கு அஞ்சலி செலுத்திய நிகழ்வு நெஞ்சத்தை நெகிழவைப்பதாக இருந்தது.

அதைத் தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

மண்டபத்தின் மையப் பகுதியில் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் மலர் வணக்கம் இடம்பெற்றது.

மாவீரர்களின் லண்டனில் வசிக்கும் உறவினர்கள், அந்த வீரர்களின் படங்களை அந்தத் துயிலும் இல்லத்தில் வைத்து மலர் வணக்கத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு மாவீரர்களின் பலநூற்றுக்கணக்கான படங்கள் அங்கு வரிசைப்படுத்தப்பட்டிருந்தன.

தொடர்ந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேசுவார் என எதிர்பார்க்கப்பட்டது. (உ)

## கூட்டமைப்பு - மிக நல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உரையில் ஈ.பி.டி.பி. கட்சியையும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவையும் அவர் காரசாரமாக விமர்சித்தார். அந்த விமர்சனங்கள் கிண்டலும் கேலியும் நிறைந்தனவாக அமைந்திருந்தன. அதனால் மண்டபத்தில் அடிக்கடி சிரிப்பும், விசில் சத்தங்களும் எழுந்தன.

அன்ரன் பாலசிங்கம் தமது உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அம்சங்கள் வருமாறு:-

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வருடா வருடம் மாவீரர் தின உரை நிகழ்த்துவது வழமை.

அது குறித்து 'உதயன்' பத்திரிகை நல்லதோர் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது. அதில் திருக்குறளுக்கு பலர் உரை எழுதியதுபோல அந்த மாவீரர் தின உரைகளுக்கும் பலர் பலவிதமான கருத்துக் கூறுகின்றார்கள் என்று தெரிவித்திருந்தது.

நானும் ஒரு கருத்துக்கூற வந்திருக்கிறேன். ஆனால் அது அதிகாரபூர்வமான கருத்தாகும். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியன் என்ற முறையில் அந்த அதிகாரம் எனக்குத்தான் உள்ளது.

இலங்கையில் முதன்மையாக மேலோங்கி நிற்கும் பிரச்சினை இனப் பிரச்சினைதான். அந்தப் பிரச்சினை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இழுபட்டு இப்போது போராக வெடித்துள்ளது.

அந்தப் போர் முடிவில்லாமல் தொடர்கின்றது. இலங்கையின் தேசிய வருமானத்தை கபளீகரம் செய்து அதன் முதுகெலும்பையே உடைத்து விட்டிருக்கின்றது. அதனால் நாடு இன்று பெரும் பொருளாதாரச் சிக்கலில் மாட்டியுள்ளது.

இனப்பிரச்சினை - யுத்தம் - காரணமாக இலங்கையில் நிலையற்ற அரசு ஆட்சியிலிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று - சமாதான வழி மூலமான தீர்வு; மற்றையது - போர்.

இந்த இரண்டு துருவங்களில் உள்ள தீர்வுகளுக்கும் ஆதரவான சக்திகள் இலங்கையில் இருப்பதாகத் தலைவர் பிரபாகரன் கூறுகின்றார்.

போருக்கும் சமாதானத்துக்கும் மத்தியிலான போட்டியாகவே இந்தத தேர்தல் வந்திருக்கின்றது.

இனப்பிரச்சினை விவகாரத்துக்குப் போர் மூலம் தீர்வு காணமுயலும் போர் வெறிகொண்ட சக்திகளை ஒதுக்கிவிடுமாறு முதல்தடவையாக சிங்கள மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார் தலைவர் பிரபாகரன்.

இனவாத சக்திகள் - போர் வெறி கொண்ட கட்சிகள் சந்திரிகாவின் மக்கள் கூட்டணியில் உள்ளன.

அந்தக் கூட்டணிக்கு முண்டு கொடுத்து நிற்கும் சக்திகளையும் சேர்த்துத்தான் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகின்றார்.

யார், யார் அந்தக் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்றார்களோ அவர்களும் அதே வகையினரே. அந்த வகையில் டக்ளஸ் தேவானந்தாவும் அதில் அடங்குகின்றார்.

இனவாத சக்திகளை நிராகரிக்கும்படி சிங்கள மக்களைக் கோரும் பிரபாகரன், தமிழ் விரோத சக்திகளை நிராகரிக்கும்படி தமிழர்களைக் கோருகின்றார். இதனை அவர் பகிரங்கமாக குறிப்பிடாவிட்டாலும் தமது செய்தியில் அதனைச் சொல்லாமல் சொல்லுகிறார் அவர்.

தமிழ் விரோத சக்திகளில் இன்று முதன்மையானது ஈ.பி.டி.பியே.

எங்களுக்கு டக்ளஸ் தேவானந்தாவில் தனிப்பட்ட கோபதாபம் ஏதும் கிடையாது.

அவரைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும் என்று எமது போராளிகள் அலைகின்றார்கள்; சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

நெருங்க முடியாத பாதுகாப்புடன் - சுற்றிவரப் பல வளையங்களாகப் பாதுகாப்பு வழங்க - அவர் திரிகின்றார். முதலில் அவரது அலுக்கோசுப் படை; அடுத்துப் பொலீஸ்; அதைச் சுற்றி இராணுவம்.

அவரது செயற்பாட்டை பார்த்து நான் அவரிடம் தனிப்பட்ட வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகின்றேன்.

'ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி' என்ற பெயரை 'ஈழமக்கள் சர்வாதிகாரக் கட்சி' என்று மாற்றிக்கொள்ளுங்கள். தேவையானால் 'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வால்பிடி கட்சி' என்றும் மாற்றிக்கொள்ளலாம்.

எங்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் - நாடாளுமன்ற வழிமுறையில் - தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையில்லை.

நமது மக்களிடம் யாருக்கு வாக்களியுங்கள் என்று நாம் கூறமாட்டோம். அப்படி நாம் கூறுவதுமில்லை.

ஆனால் யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பதை நாம் தெளிவுபடுத்துகின்றோம் அவ்வளவே!

நாங்கள் விடுதலைப் போராட்டம் நடத்துபவர்கள். எமது மண்ணை மீட்பதும், எமது மக்களை மீட்பதும், அவர்களுக்கு சுதந்திர வாழ்வைப் பெற்றுக்கொடுப்பதும் எமது இலட்சியங்கள்.

தற்போது தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது வரலாற்றில் நல்லதொரு திருப்பம். இது அப்படியே தொடரவேண்டும். கட்டுக்கோப்பும் ஐக்கியமும் சிதறாமல் பேணப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில விக்கிரமசிங்கவுக்கும் ஏதோ ஒப்பந்தம் இருப்பதாகக் கதை கிளப்பி, சிங்கள மக்களை திசை திருப்பி, வாக்குத் திரட்ட சந்திரிகா அம்மையார் முயல்கின்றார்.

புலிகளுக்கும் ஐ.தே.கட்சிக்குமோ அல்லது புலிகளுக்கும் ரணிலுக்குமோ எந்தவித உடன்பாடும் கிடையவே கிடையாது என்பதை நான் அடித்துக்கூற விரும்புகிறேன்.

- என்றார் பாலசிங்கம்.

சர்வதேச அரசியல், விடுதலைப் போராட்டங்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தும் சர்வதேசப் போக்கு ஆகியவை குறித்து அவர் விவரித்தார். அவரின் உரை தொடர்ந்து கொண்டிருந்தது.

அவரின் உரையின் மேலதிக விவரங்கள் பின்னர் உதயனில் பிரசுரமாகும். (உ-9)

## கட்டைபறிச்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜுனைத் சுபைதா (வயது 2) மற்றும் ஆனந்தராஜா தட்சாயினி (வயது 26) ஆகிய மூவரும் படு காயமடைந்தனர். இவர்களில் தட்சாயினியின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி சுமார் 100 ஷெல்களை ஏவியதாகவும் -

பதிலுக்கு விடுதலைப் புலிகளும் ஷெல்களை முகாம் நோக்கி ஏவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் பொதுமக்களின் 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதத்துக்குள்ளாகியதாகவும் கூறப்பட்டது. (ம-9)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அலுவலகத்தின் அறையொன்றில் அபிவிருத்தித் தொண்டர்கள் நியமனம் தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன என்றும் -

அந்த அறையில் இருந்த மேசை ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே அப்போது வெடித்தது என்றும் - கூறப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பே காரணம் என்று ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் சு.ராசமாணிக்கம் குற்றம் சுமத்தினார். எனினும் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பு இந்தக் குற்றச் சாட்டை அடியோடு மறுத்துள்ளது. (ம)


**நாளை ஆரம்பம்**

தரம் 5 முதல் O/L வரையான புதிய பிரிவு ஆரம்பம்

03.12.2001 (திங்கள்)
காலை 8.00 மணி

**ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம்.**



**கணக்குப்பிள்ளை தேவை!**

கடைக்கு கணக்கு எழுதக்கூடிய முன் அனுபவம் உள்ள ஆண் தேவை.

தொடர்பு:
அன்னராசா களஞ்சியம்,
356, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
(95471)


## திருத்தம்

நேற்றைய உதயனில் 2ஆம் பக்கத்தில் பிரசுரமான -

பட்டயச் செயலர், முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர், யாழ்.ப.நோ.கூ.ச.தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர், யாழ்.மா.வி.நு.கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் (வேட்பாளர் இலக்கம் 5) அவர்களை ஆதரிக்கக் கோரும் விளம்பரத்தில் -

அந்த விளம்பரத்தைப் பிரசுரித்த **'யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணியாளர்கள்'** என்ற பெயர் தவறுதலாக இடம்பெறவில்லை. அதனையும் சேர்த்து வாசிக்கவும்.


**அறிவித்தல்**

1999/2000/2001 ஆம் ஆண்டுகளில் எமது நிறுவனத்தில் பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(95486) Director, **UNIVAC.**


## பிரசாரக் கூட்டங்கள்

ஐ.தே.கட்சியின் இறுதி - 41 ஆவது - பிரசாரக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயண கோயிலுக்கு அண்மையில் நடைபெறும் அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் உட்படப் பலர் உரையாற்றுவர். (உ)


**BARATHY**

சித்தன்கேணி

*A/L DAY CLASS*

மீட்டல் வினா - விடை


ஆரம்பம் 03-12-2001 (திங்கள்)

*Eco* - சண்
*Acc* - முகுந்தன்
*Com* - பசில்
*Log* - R.P.சர்மா
*Tam* - பாலா
*H.c.* - சுரேஷ்
*Dam* - சுதன்
*H.m.* - தரன்
*Geo* - குமரன்
*R.c.* - வசந்தன்
*Eng* - விஜயபாஸ்கர்

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(95392)





**நாடாளுமன்றத் தேர்தல் - 2001**

**அன்பிற்கினிய யாழ்.மாவட்ட வாக்காளர்களே!**

- அழிவு தரும் யுத்தத்தை இல்லாமற் செய்வோம்!
- அமைதியையும் சமாதானத்தையும் மீட்டிடுவோம்!
- இராணுவ இராஜ்ஜியத்தை நீங்கிடச் செய்வோம்!
- சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்போம்!
- அழிக்கப்பட்டவற்றைக் கட்டியெழுப்புவோம்!
- உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்துவோம்!
- மகிழ்வோடும் செழிப்போடும் வாழ வழி செய்வோம்!

தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்)

மீன் சின்னத்திற்கே வாக்களியுங்கள்



(94898)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.